REGD No. 3843.

MADRAS

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

சிவநேசன்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு கஉ. } திட்டை வெகுதானிய—தை 1939--பிப்ரவரி--1உ { திங்கள் கூ.

எண்.	உள்ளுறை.	பக்கம்.
1.	பொங்கல் நன்மொழி	137
2.	சிவநேசனுக்கு வாழ்த்து ...	138
3.	தில்லைவாழந்தணர் புராணம் ...	139
4.	ஆலயப்பிரவேச அவர்ண சவர்ண விவகாரம்	143
5.	மங்களத்தின் அடிப்படை	151
6.	பிரார்த்தனை ...	152
7.	உயர்ந்தோர் கூறும் உறுதிமொழிகள் ...	,,
8.	ஆணவமலமே இருவினைகட்கும் நிமித்தகாரணம்	153
9.	திருக்கல்யாண உண்மை விளக்கம் ...	155
10.	அன்புரிமைக் கடிதம்	157
11.	மதிப்புரை மஞ்சரி	158
12.	அற்புதப் பத்திரிகை	159
13.	திருக்கைலாயகிரி யாத்திரை ...	160
14.	ஸ்ரீகாசியாத்திரைவிளக்கம் முகப்புப்பக்கம் முதலியன	(1-8)

ஆசிரியர்:— ராம. த. ராம. இராமசாமி செட்டியார், திட்டை. (S. I. R.)

செய்தித்திரட்டு.

உள்ளூர்:- சிவாலயத்தில் மார்கழி உக உ திருவாதிரைநாள் அகரமாங்குடி ஐயரவர்களால் நடராச்சரபிடேகமும் தரிசனமும் சிறப்பாகச் செய்விக்கப் பெற்றன. சிவாலயத்திருப்பணி சுவாமி கோவிலுக்கு தைமீ கஉ உ முதற்கால்வரி முகூர்த்தம் செய்து வேலை நடைபெறுகிறது. போர்டு பள்ளிக்கூடத்தை எடுத்துவிடபோர்டார் கருதுவதாகத்தெரிகிறது. கிராமவாசிகள் நிலைநிறுத்திக் கொள்ள முயலுதல் வேண்டும்.

பலவான்குடி:- தை உக உ தைப்பூச தீர்த்தவாரிக்கு வேலன் குடியிலிருந்து கந்தசுவாமி இவ்வூர் வழியாக எழுந்தருளித் தேனாற்றில் தீர்த்தம் வழங்குவர்.

திருவாசக பாடசாலையில் மார்கழி சஉ கேட்டைநாள் ஸ்ரீ சொக்கலிங்க சுவாமிகளின் முதலாவது குரு பூசை நடைபெற்றது.

குன்றக்குடி:- ஆறுமாமுகப்பிரான் இருதேவிமாருடன் தைமீ கஉ உ தொடங்கித் திருவிழாக் கொண்டருளுகின்றனர். உ0 உ தேர்த்திருவிழாவும், உக உ பூசநாள் பழநியாயி ஊருணி மண்டபப்படியுங்கொண்டருளித் தேனாற்றில் தீர்த்தம் வழங்குவர்.

கண்டனூர்:- சி. நெ. வீர. குடும்பத்தினர் நூதனமாகப் பெருமாள் கோவில் பிரதிஷ்டை செய்து கோயில் குளங்கள் சிறப்பாகத் திருப்பணி செய்யப்பெற்று நிறைவேறி இன்று மகா கும்பாபிஷேகம் மாண்புடன் நடத்துகின்றனர். இராத்திரி தங்க கருட சேவையும் சங்கீத கச்சேரியாகிய வைகளும் வெகு இங்கிதமாக நடைபெறும்.

பினங்கு:- தனவணிக நகரத்தார்கள் தங்குலதெய்வமாக வழிபடுங் குமரக்கடவுள் மகர புஷ்ய மகோற்சவங்கொண்டருளத் திருவுளங்கொண்டு திருமஞ்சன திருவாராதனைகள் உவந்து திவ்ய இரத்தினபரணலங்கிருதராய் சுவர்ண மயில் வாகனரூடராய் வெள்ளிவிமானத்தில் ஆரோகணித்து மேள தாள விருதுகளுடன் இம்மதி உ0 உ தஞ்சமா நகரிலிருந்து தண்ணீர் மாமலைக் கெழுந்தருளி உக உ மகேசுர பூசையுவந்து இரவு திருவுலாக்காட்சி தந்து உஉ உ சர்க்கரைக்காவடிகளின் அபிஷேகத்தையுவந்து உங உ தண்ணீர் மாமலையினின்றும் திருவுலாக்கொண்டு தமதிருக்கை சேர்ந்தருளுவர் எனப் பினங்கு நகரத்தார் திருமுகம் வழங்கியுள்ளார்கள்.

ADR

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

...தமிழர் தழைத்தினி தோங்குக.

சிவநேசன்.

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

திருத்தென்குடித்திட்டை.

ஆண்டு கஉ. } வேகுதானிய—தை 1939—பிப்ரவரி—1௳ { திங்கள் கூ

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானு லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும் அருளைப் புரியாய் பொன்னம் பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

பொங்கல் நன்மொழி.

(திருவந்திபுரம், ஸ்ரீ பாநுகவி மாணவர்கழக மாணவர்,
திரு, த. உலகநாதன் அவர்கள்.)

நிலை மண்டில வாசிரியப்பா.

பொங்கற் புதுநாள் புலர்ந்தது! புலர்ந்தது!
பொங்குக பாலே பொங்குக பாலே
இறைவன் அருள்நமக் கென்றும் பொங்குக
மன்னவன் செங்கோல் மல்கிப் பொங்குக
எங்கணு மக்கட் கின்பமே பொங்குக
அன்பு பொங்குக அருளும் பொங்குக
சாந்தம் பொங்குக சமரசம் பொங்குக
சத்தியம் பொங்குக தருமமும் பொங்குக
தேனினு மினிய செந்தமிழ் பொங்குக
பொங்கலோ பொங்கல்! பொங்கலோ பொங்கல்!
தமிழர்கள் வாழ்வு தழைத்தினி தோங்குக
தமிழ்க்கலை யோடு தமிழர சோங்குக
தமிழ்நிலம் செழிக்க தமிழ்நெறி தழைக்க
வீரம் பொங்குக வெற்றியும் மிகுக
ஒற்றுமை யணியே ஊன்றுக நாட்டில்
மடியும் மிடியும் பயக்கமும் ஒழிக

ஒழுக்கமும் ஊக்கமும் ஓங்குக யாண்டும்
தமிழ்நலம் புரக்கும் சான்றோர் வாழ்க
தண்டமி ழன்னையின் தண்ணருள் வாழ்கெனப்
பொங்குக பாலே! பொங்குக பாலே!

சிவநேசனுக்கு வாழ்த்து.

(திருவத்திபுரம், ஸ்ரீ பாநுகவி மாணவர்கழக மாணவர்கள் திரு, கோ. வில்வபதி, திரு, த. உலகநாதன் ஆகியவர்கள்)

க. சைவந் தமிழென்னுந் தன்மையறிந் தேமக்கள்
உய்ய வருள்செய் யொருதோழன்—செய்ய
சிவநேச னென்னுதிருச் செல்வன்பல் லாண்டு
புவியிற் றழைக பொலிந்து.

உ. சீர்கொண்ட தென்குடித் திட்டைச் சிவநேசன்
பேர்கொண்டு பாரிற் பிறங்குகவே—ஏர்கொண்ட
செந்தமிழ்சே ரன்னை திருவருளா லெஞ்ஞான்றும்
அந்தமி லின்பத் தணைந்து.

ங. திருவளர் தென்குடித் திட்டையம் பதியில்
கருவளர் ஐவகைப் பூதங் காணும்
ஒருபெருந் தலைவனின் ஒன்றிய தோழனும்
திருப்பெய ரமைந்து சிறப்புறு மணியே!
தமிழ்நல னுடும் தனிப்பெருந் தலைவ!
தமிழ்த்தாய் சிறப்புறு தகையுறு மைந்த!
நீயே தோன்றி நின்னலங் கொண்டு
தமிழர் தமிழ்நாடு தமிழ்மொழி யென்னும்
தனிப்பெரு முரிமை தமிழர்க் காகக்
குறித்திடு கட்டுரை கொண்டு நின்வயின்
பைந்தமிழ்ச் சொற்களின் பாங்கும் பெற்றுப்
பொங்கற் புதுநாட் பொங்கிய வழகு
தண்கதிர் மதியும் தயங்கு மாறு
இனிப்புறு மமுதம் ஈந்திடு வாயெனத்
தமிழர் தலைவனும் தணிகை வேளின்
இணைமலர்ப் பதத்தை இனிதிறைஞ் சுவமே.

ச. செந்தமிழர் போற்றலுறுஞ் செல்வச் சிவநேச
கந்தனரு டன்னுற் களிப்புடனே—சந்ததமும்
வேண்டும் பொருள்கொண்டு மேதினியில் வாழியரோ
நீண்டதோ ரின்புடனே நீ.

ரு. வாழி சிவநேச வாழியநின் நற்பணிகள்
வாழி நினைப்போற்றும் வண்டமிழர்—ஊழிதொறும்
ஓங்குக நின்வளமும் ஒதுபுகழ்த் தாரணியோர்
தாங்குகவே நின்னைத் தழுத்து.

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

தில்லைவாழந்தணர் புராணம்.

வல்வெட்டித்துறை சுந்தவன ஆலய ஆதீன கர்த்தர், திக்கம்,
திரு, சி. செல்லையாபிள்ளையவர்கள்.

ஆதியாய் நடுவுமாகி யளவிலா வளவுமாகிச்
சோதியா யுணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா வேகமாகிப் பெண்ணுமா யாணுமாகிப்
போதியா நிற்குந்தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி.

இ-ள். ஏகமாகித் தோன்றியபொருள்-ஆதி நடு வந்தங்கடந்த பரம்பொருளாகிய பரசிவம், பெண்ணுமா யாணுமாகி-"அனாதியே ஆணவமல பந்தமுற்ற ஆன்மாக்கள்மீது கொண்ட கருணையானே" சத்தியாகியுஞ் சிவமாகியும், ஆதியாய் நடுவுமாகி-சிருட்டி திதிசங்காரமாகியும், அளவிலா வளவுமாகி-திரோபவமாகியும், சோதியாயுணர்வுமாகி- அனுக்கிரகமாகியும், தோன்றிய பொருளுமாகி- தோன்றியருளும் ஸ்ரீநடராஜப்பெருமானாகியும், பேதியா-பேதித்து, போதியா நிற்கும்-" ஆன்மாக்களது பக்குவத்திற் கியைய உண்மை ஞானத்தை" ப்போதித்து நின்றருளும், தில்லைப்பொது நடம் போற்றி போற்றி-தில்லை மன்றின் கண்ணதாய திருநடம் எம்மாற் றுதிக்கப் படுவது துதிக்கப்படுவது.

ஏகமாய்த் தோன்றிய பொருள் பெண்ணுமாயாணுமாகி ஆதியாய் நடுவுமாகி அளவிலா வளவுமாகிச் சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப் பேதியா போதியா நிற்குந்தில்லைப் பொது நடம் போற்றி போற்றி எனக்கூட்டுக.

தோன்றிய பொருள் என்பதனை ஏகமாய் என்பதனோடுங் கூட்டுக. ஆதியுளதாகவே அந்தமும் பெற்றும்.

சிருட்டி திதி சங்காரமெனப்படும் முத்தொழிலும் ஆன்மாக்களது பெத்தநிலையில் நிகழ்வனவாய்ப் பாசஞான பசுஞானங்களால் அளக்கப்படுமியல்பின வென்பதனையும், அவைபோலாது திரோபவம் அம்முத்தொழிற்கும் முதலாய் ஆன்மாக்களது பக்கு

வத்திற்கேற்பப் பெத்தம் முத்தியிரண்டனையும் பயந்து பாசஞான பசு ஞானங்களுக்கப்பாலதாய் அளவையின்பாற்படாத அளவாய் எஞ்ஞான்றும் ஒரு பெற்றித்தாய் நிற்கும் இறைவனது வரம்பி லாற்றலுள்ள அருட் சத்தியின் தொழிலென்பதனையும், உய்த் துணர வைப்பான் கருதி அவ்வத் தொழிற்குரிய சிறப்பு மொழி யாற் கூறாது காலவளவையைக் குறிக்குங் கூற்றானே "ஆதியாய் நடுவு மாகி" என இனம்பற்றி முத்தொழிலையும் ஒருங்காகவும், அளவிறந்து நிற்கு மியல்பால் திரோபவத்தை வேறாகவும் வைத்து உடம்பொடு புணர்த் தோதிய பெருவனப்பு நோக்குந்தகையது. திரோபவத்தி னனுபவ வியல்பை,

"பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்
பொன்னின் மறைந்தது பொன்னணி பூடணம்
தன்னை மறைத்தது தன்கர ணங்களாம்
தன்னின் மறைந்தது தன்கர ணங்களே.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே."

என்னுந் திருமூலர் திருவாக்கானு முணர்க.

"ஒளிக்கு மிருளுக்கு மொன்றே யிடமொன்று மேலிடி லொன் றொளிக்கும்." என்னுந் திருவாக்கும் ஈண்டுச் சிந்திக்கற் பாற்று. இறைவனருட் சத்தி யொன்றே திரோதான சத்தியாய்ப் பெத்தத்துப் பதியினையும், அருட் சத்தியாய் முத்தியிற் பிரபஞ் சத்தையும் மறைத்து நிற்பதாம்.

பசுத்துவ நீக்கத்துளதாய சிவத்துவ விளக்கமாகிய பாம சுகத்தினைச் "சோதியாய்" எனவும், ஆண்டு மின்றியமையாது உடனாய் நின்று அப்பரபோகத்தை யூட்டியருளுஞ் சிவசத்தியை "உணர்வு" எனவும், அவ்விருநிகழ்ச்சியு முடனிகழ்வின் "சோதியா யுணர்வுமாகி" எனவும் ஒருங்கு கூறினர்.

கற்பனை கடந்த சோதியாகிய பரசிவம் கருணைத்திருமேனி கொண்டு நடராஜப் பெருமானா யெழுந்தருளிய அவசரத்து ஐந்

தொழிலு மப்பிரானரது அதியற்புத ஆனந்தவடிவிற் காணப்படுதலில் "தோன்றிய பொருளுமாகி" எனவுங் கூறினர்.

அங்ஙனமாதலே:—

"தோற்றந் துடியதனிற் றோயுந் திதியமைப்பிற்
சாற்றியிடு மங்கியிலே சங்கார—மூற்றமா
யூன்று மலர்ப்பதத்தி லுற்ற திரோதமுத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு."

என்னுஞ் சுருதியானு முணர்க.

மகா சங்கார காலத்து முதல்வன் சத்தி வியாபாரங்களை ஒழித்துப் பகுப்பின்றித் தானேயாய் நின்றநிலை "ஏகம்" எனக் கூறப்பட்டது.

பின் சத்தி வியாபாரந் தொடங்கிய அவதாரம் "பெண்ணுமாய் ஆணுமாகி" எனக்கூறப்பட்டது.

ஏகமாய் நின்ற பொருள் பெண்ணுமாய் ஆணுமாய் ஐந்தொழில் மூர்த்தியாய் நின்ற அவதாரமே பேதித்த நிலையாதலிற் "பேதியா" என்றார்.

போதித்தல் ஐந்தொழில் நடாத்தும் முறையானே யான்மாக்களுக்கு உண்மைஞானத்தை யுணர்த்துதல்.

இப்பெற்றித்தாய ஆனந்தத் திருநடனம் ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ நடராஜப் பெருமான் திருத் தில்லையின் கண்ணதாய கனக சபையில் நிகழ்த்துவது ஆதலின் "தில்லைப் பொதுநடம்" என்றார்.

ஈண்டுக்கூறியவை எம்பிரானரது தடத்த சொரூப இலக்கணங்களா யமைவன வாயினும் இச்செய்யுள் அவரது ஐந்தொழில் நடத்தைத் துதித்தற்கு எழுந்ததாகலின் அவற்றின் இவையமையு மியல்பானே எம் சிற்றறிவிற் கெட்டியபடி பொருள் எழுதினும்.

இச்செய்யுட்கு இங்ஙனம் பொருளிறுத்தல் ஆசிரியர் கருத்தென்பது ஸ்ரீநடராஜப்பெருமானது திருநடஞ்செய்யுந்திருப்பாதங்களைத் துதிப்பானெழுந்த அடுத்த செய்யுளில் "கற்பனை கடந்த சோதி" என்பதனால் "ஏகமாகி" என்பதனையும் "கருணையே யுருவமாகி" என்பதனால் "பெண்ணுமா யாணுமாகி" என்பதனை

யும் "அற்புதக் கோலநீடி" என்பதனல் "ஆதியாய் நடுவுமாகி அளவிலா வளவுமாகிச் சோதியா யுணர்வுமாகித் தோன்றியபொரு ளுமாகி" என்பதனையும் அனுவதித்துத் துதித்த முறையா னினிது விளங்கும்.

தோற்றம் நிலை ஒடுக்கம் மறைப்பு அருள் என்னும் ஐந்தும் முறையே, கன்மங்கழியு முகத்தான் மலபாகம் வரச்செய்தலும், கன்மங்கழியுமாறு அதனை நுகர்வித்தலும் இளைப்பாற்றலும் கன்ம ஒப்பு வருவித்து மலங்களை முதிர்வித்தலும், பந்தம் விடுவித்தலு மாகிய உறுதிப் பயத்தனவாகலான் ஐந்தொழிலும் அருட் செயலேயாம்.

அங்ஙனமாதலே:—

"அழிப்பிளைப் பாற்ற லாக்க மவ்வவர் கன்ம மெல்லாங்
கழித்திட னுகரச் செய்தல் காப்பது கன்ம வொப்பிற்
றெழித்திடன் மலங்க ளெல்லா மறைப்பருள் செய்தி தானும்
பழிப்பொழி பந்தம் வீடு பார்த்திடி னருளே யெல்லாம்."

என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தத்தானு முணர்க. உம்மைகள் எச்சமும் எண்ணுமாம்.

அளவிலாவென்பது தகரவீறு குறைந்த பெயரெச்சம். தோன் றிய எனத் தன்வினை வாய்ப்பாட்டா னோதியிருத்தலால் "தோன் றிய பொருள்" என்பதற்கு ஸ்ரீநடராஜப்பெருமான் எனப்பொருள் உரைக்கப்பட்டது. பேதியா போதியா வென்பன செய்யாவென் னும் வாய்ப்பாட்டு வினை யெச்சங்கள்.

போற்றி யென்பதி லீரிடத்தும் இகரம் செயப்பாட்டுப்பொரு ளது. அடுக்கு ஒரு தொழில் பல்கான் நிகழ்தலோடுயர்ச்சிப்பொ ருட்டுமாம். ஆதி நடு வென்பன வாகு பெயராய் அவ்வத் தொ ழிலை யுணர்த்தின.

மற்று அனுமான அளவையாற் கொள்ளப்பட்ட அந்தமும் அங்ஙனமே யத்தொழிலை யுணர்த்திற்று. "ஆதியா யீருய் நடுவா யவை கழிந்த சோதியாய்" என்ருர் பரஞ்சோதியாரும்.

திருச்சிற்றம்பலம்.

ஆலயப் பிரவேச அவர்ண சவர்ண விவகாரம்.

(சைவத்திருவாளர், காழி, பி. அகோரம் பிள்ளை அவர்கள்.)

1. அவர்ணன்:— அவர்ணரை ஆலயத்துட் பிரவேசிக்க விடலாமென்ற விருப்பம் பெரும்பாலான சவர்ணருக்கு இப்போது உண்டாய் விட்டது.

சவர்ணன்:— சவர்ணருள் ஆரியசமாஜிகள், பிரமசமாஜிகள், பிரமஞான சபையினர், சுயமரியாதையியக்கக்காரர், பொதுவுடைமைக்கட்சியார், தேச விடுதலைத் தாகமொன்றேயுடையார், ஆலயத்துக்குத்தினந்தோறும் போய்த் தாஞகவேண்டு மென்ற கொள்கையில் தளர்ச்சியுடையார், எம்மதமுஞ் சம்மதமென்ற கொள்கையுடையார், இசுலாமியர் முதலியோரைக் கண்டு நடுங்குபவர் ஆதியோரெல்லாமிருக்கின்றனர். அவர்ணரை ஆலயத்துள் விடுவதற்கு அவ்வகையினர் விருப்பமும் வேண்டுமா? அவ்விருப்பமும் இசுலாமியர் கிறிஸ்தவர் விருப்பமும் ஒன்றே. அவ்வாரியசமாஜிகள் முதலியோர் நீங்கிய சவர்ணருள் அவ்விருப்பமுடையார் மிகக் குறைவாகவேயிருப்பர்.

2. அ:— அச்சவர்ணர் எப்படி யிருப்பர்?

ச:— சைவமென்றொரு சமயமிருக்கிறது. பரத கண்டமுழுவதற்கும் அச்சமயப் பிரமாண சாத்திரமாய் விளங்குவன இருக்காதி நான்கு வேதங்களும் காமிகாதி இருபத்தெட்டுச் சிவாகமங்களுமாம். ஒரு சமயத்தின் தெய்வவாக்கேஅச்சமயத்தின் பிரமாணசாத்திரம். சமயப்பிரமாணசாத்திரத்துக்கிலக்கணம்அதுவே. ஆகலின் அவ்வேதசிவாகமங்களுக்குச்சிவபிரானே வக்தா.சைவராயுள்ளபேர் அவ்வுண்மையைஉடன்படுவர்.அவராற்கூடியவரை அவற்றிற்கண்டஆசாரங்கள் அனுட்டிக்கப்படும். சிவதீக்ஷை விபூதி ருத்ராக்ஷதாரணம் புண்ணிய தினங்களிலாவது சிவதரிசனத்தினிமித்தம் ஆலயத்துக்குப்போதல் முதலியவற்றை அவர் உடையராயிருப்பர். தம்தேசம். பாஷை ஜாதி முதலிய வற்றினும் மேம்படத் தம் சமயத்திலபிமானம் அவருக்கிருக்கும். வேண்டுமாயின் அவரே அவர்ணரின் ஆலயப் பிரவேசத்தை விரும்புதற் குரியார். வைஷ்ணவர் முதலியோருள்ளும் அம்முறையே அமையும்.

3. அ:— சவர்ணருள் அத்தகைய கண்ணியவான்கள் இப்போது கிடைப்பது அரிது.

ச:— அதனால் அவர்ணரின் ஆலயப்பிரவேசத்துக்கு ஆலய விரோதிகளின் விருப்பத்தையும் நாடலாமென்பது கருத்தா? ஆயின் அது ஆலய பரிபாலனமாகாதென்க. சவர்ணரிலுள்ள ஆலயசமயிகளை முதன்முதல் அவரவர் சமயத்தில் நிறுத்தவேண்டும். அது அரசின்வேலையுமாம். சமய விஷயங்களில்அரசுநடுநிலைவகிப்பதென்பது அதுவே. 'தத்தஞ்சமயத்தகுநி நில்லாரை - யத்தன் சிவன் சொன்ன வாகம நூனெறி - யெத்தண்டமுஞ்செயு மம்மையி லிம்மையின் - மெய்த்தண்டஞ் செய்வதவ் வேந்தன் கடனே' என்றது திருமந்திரம். அப்பாற்றான் அவர்ணரின் ஆலயப் பிரவேசத்துக்கு அச்சவர்ணரின் விருப்பத்தை நாடல் பொருந்தும்.

4. அ:— அவர்ணர் தாழ்ந்த நிலையிலிருக்கின்றனர். சவர்ணரின் நிலைக்கு அவர் உயரவேண்டும். அவராலயப் பிரவேசமே அதற்கு வழி.

ச:— சவர்ணர் உயர்ந்துளார்; அது அவருக்குள்ள ஆலயப்பிரவேசத் தாற்றான் வந்தது என்பது அதனாற் பெறப்படும். அவர் தம்மளவில் அவ் வுயர்வைக் காத்துக்கொள்கின்றனரா? அவருள் எத்தனைபேர்கோயிலுக்குப் போய்ச் சுவாமிதரிசனஞ் செய்கின்றனர்? ஆங்கிலப்படிப்பும் நாகரீகமும் மிகுந்து கோவிலுக்குப் போகாதவரே பலர். கோவிலுக்குப் போகாமையே அவருக்கு இப்போது பெருமையாக இருந்து வருகிறது. அவர்ணருக்கு மாத்திரம் ஆலயப்பிரவேசம் எப்படிப் பெருமையைக் கொடுத்துவிடும்? சவர்ணரெல்லாருமே கோவிலுக்குப் போவதைப் பெருமையாகக் கருதுகின்றனரென்று கண்டபிறகே கோவிலுக்குப் போவது அவர்ணருக்கும் உயர்வு தரக்கூடியதென்ற பிரசங்கம் அர்த்தமுடையதாகும்.

5. அ:— கோயிலில் அவர்ணர் புக அனுமதியில்லையானால் அங்கு நந்தனாரை வைத்துப் பூசிக்கலாமா?

ச:— நந்தனார் சரிதத்தைப் பிரமாண நூலில் நன்கு படித்தறிய வேண்டும். தன் கொள்கைக்கேற்ப அச்சரிதத்தைத் திரித்துப்படிப்பவன் ஏமாறவே செய்வான். அவனும் தன் மனைவியைப் பிறனுக்குவிட்டுப் பெறும் லோகாபவாதத்தை இயற்பகையார் சரிதப்பிரசங்கத்தாற் போக்கிக் கொள்ளமுயலுமொரு மானக்கேடனும் ஒன்றே. பெரிய புராணம் பத்தி நூல். அவர்ணரின் ஆலயப்பிரவேசத்துக்கு விதிநூலிலிருந்து விதிகளை யெடுத்துக்காட்டுவதே யோக்கியம்.

6. அ:— பிரபலஹிந்துக்கள் ஒரு பெரிய நகரில் ஒரு சபை கூடினார்கள். அவர்ணரின் ஆலயப் பிரவேசம் அந்தச் சபையில் அங்கீகரிக்கப் பட்டது. மற்றைச் சவர்ணர் அதற்குமாறு என் பேசவேண்டும்?

ச:— இன்னின்ன இலக்கணமுடையவரே பிரபல ஹிந்துக்களென்ற வரம்புண்டா? அஃதுரைக்கப்படாமையால் அச்சபைத் தீர்மானம் தாராள

மாக மறுக்கப்படலாம். ஜவஹர்லால் நேருவும் பிரபல ஹிந்துதான். ஆனால் அவர் கோயிலை யிடிக்கவேண்டுமென்ற பிரபல ஹிந்துவல்லரோ? பஜோரியா சங்கராசாரியர் முதலியவர் பிரபல ஹிந்துக்களில்லையா? அவர்ணருக்கு ஆலயப் பிரவேசங் கூடாதென்று அவர்சொல்லுவது எப்படி மறுக்கப்படலாம்?

7. அ:— ஹிந்துக்களிலுள்ள பல பகுதியினரும் தாராளமாய்ச் சமமாய் புகுந்து அளவளாவித் தமக்கெல்லாம் பொதுவான தேவதையைத் தொழுமிடங்களே ஆலயங்கள். அங்ஙனமாக அவர்களின் ஒரு பகுதியின ரான அவர்ணர் மட்டிற் கோவிலுக்கு வெளியில் நிறுத்தப்படுவானேன்?

ச:— ஆலயப்பிரவேசகருள் ஒவ்வொருபகுதியினரும் ஆலயத்திலுள்ள ஒவ்வொரு கட்டில் நின்றுதான் தேவ சேவை செய்கின்றனர். எல்லாப் பகுதியினரும் ஒரே கட்டிற்குட் புகுவதில்லை. சிவாலயத்தில் ஆதிசைவ ரல்லாத மற்றைப் பார்ப்பனர் தானும் கர்ப்பக்கிருகத்துட் புகுதல்கூடாது. அவரை அதிற் புகவொட்டாமல் தடுத்துவைக்குஞ் சட்டப்புத்தகமே அவர்ணரை ஆலயத்துக்கு வெளியில் நிறுத்திவைக்கலாயிற்று. கர்ப்பக் கிருகத்துள் புகத்தடையிருப்பதால் அத்தடையை நீக்குஞ் சட்டமொன்றை சர்க்கார் இயற்றித்தரவேண்டுமென்று அப்பார்ப்பனர் முயல்கின்றனரா? அத்தடையை அவர் அகௌரவமாக நினைப்பதில்லை. அக்கண்ணிய புத்தி யன்றோ அவர்ணருக்குமிருக்கவேண்டும்? அவருக்கு ஆலயப்பிரவேச மளித்த திருவாங்கூரரசரும் சனன மரணத் தீட்டுள்ள ஹிந்துக்களையும் விலக்கமான ஹிந்து ஸ்திரீகளையும் ஆலயப்பிரவேசத்துக்கனுமதிக்கவில்லை. அத்தீண்டாமை மட்டில் ஏனிருக்கவேண்டும்? விலக்கமான ஸ்திரீகளும் சனன மரணத் தீட்டுள்ளவர்களும் தனித்தனியோ சேர்ந்தோ மகாநாடுகள் கூடித் தமக்கும் ஆலயப் பிரவேசம் வேண்டுமென்று தீர்மானஞ் செய்து. அதை அவ்வரசருக்கு அனுப்பினால் அத்தீண்டாமையும் ஒழியும் போலும். தாராளம் சமம் என்பன ஆலயத்தில் இல்லாதவைகளே. ஹிந்துக்களுக்குப் பொதுவான தெய்வமொன்றிருந்தால் அது பற்றியாவது ஆலயத்தில் அவர் ணருக்கு நுழைய இடனுண்டு. ஹிந்துவென்பது ஒரு மதமுமன்று. அதற் கொரு பொதுத் தெய்வமுங் கிடையாது.

8. அ:— சவர்ணரெல்லாரும்ஒரேவிதமான ஆசாரம்அனுஷ்டானம் ஆகார பரிசுத்தம் உடையரல்லர். வித்தியாசங்கள் பல. ஆயினும் அவர்க் கெல்லாம் ஆலயப்பிரவேச முண்டு. அவ்வித்தியாசங்களே காரணமாக அவர்ணரை மட்டும் ஆலயத்துக்கு வெளியே நிறுத்துவது தப்பு.

ச.— இந்த வழக்குஇசுலாமியர் முதலியவரையும்ஆலயத்துள் விடலா மென்பதற்கு இடஞ் செய்பக்கூடியதாயிருக்கிறது. சவர்ணருக்கு ஆலயத்தி

விருக்கும் பிரவேச வுரிமையைக் கண்டுபிடிப்பதே கடன். ஆலயப் பிரவேசத்துக்கு ஆசாரம் அனுஷ்டானம் ஆகார பரிசுத்தம் முதலியன வேண்டாவா? ஆலயப்பிரவேசகருள் ஏகோபித்த ஆசாரம் அனுஷ்டானம் ஆகார பரிசுத்தம் முதலியனவேண்டுமென்று ஒரு சட்டத்தை முதன்முதல் பிறப்பித்தலன்றோ உண்மையான ஆலய பரிபாலனமாகும்? ஆலய தெய்வீகத்தைக் கெடும்படிவிட்டு அக்கேட்டினையே அவர்ணரின் ஆலயப்பிரவேசமாகிய மேலுமொரு கேட்டிற்கு அனுகூலகாரணமாகப் பேசிவருவது ஆலயத்தை அதிகமும் நாசப்படுத்தும்; அவர்ணரையும் மேன்மைப் படுத்தாது.

9. அ:— ஆங்கில அரசு சமய விஷயங்களில் நடுநிலைகொண்டது. அந்நீதிமன்றங்கள் இங்குள்ள அவ்வச்சமயப் பழக்கவழக்கங்களை அவ்வச் சமயத்தவர்க்கு அழித்துவிடாமற் காத்துக்கொடுத்தன. அவற்றை அதிக்ரமித்தவர் நன்கு தண்டிக்கப்பட்டனர். அம்மன்றங்களின் அச்செயலாற்றான் அச்சமயங்கள் உயிராற்றனவாயின.

ச:— இசுலாமிய அரசு மதவிஷயங்களில் நடுநிலை வகியாமலும் அந்நிய சமயிகளைத் திருத்துவதுபோல் அவர்களைக் குடுமிவைக்கக்கூடாது; இசை பாடக்கூடாது; வாத்தியம் வாசிக்கக்கூடாது என்று நிர்ப்பந்தஞ் செய்ததாலுமே மறைந்தது. ஆங்கிலருக்கு அது தெரியும். மத விஷயங்களிற் பிரவேசிக்கும் அரசு மாயுமென்பது அவர் கொள்கை. எந்த அரசும் மாறுவதியல்பு. சமயம்அழியாது அந்தந்த மதத்தில் அந்தந்த மதத்தரை நிறுத்தி வைப்பதுதான் அரச நீதி. முன் திருமந்திரங் காண்க. ஆகவே ஆங்கில மன்றங்கள் செய்தன சிறிதுந் தவறாகா. இந்நாட்டுமதங்கள் ஆங்கிலநீதிமன்றங்களாற் சத்துக்கெடவில்லை. ஹிந்துக்களை ஆள்வது ஆங்கில அரசு. ஆங்கிலேயர் கிறிஸ்தவர். விக்கிராராதனை அவர்க்கு உடன்பாடன்று. இசுலாமியரும் அவ்வாராதனையை உடன்படார். அவ்விரு சமூகத்தினரின் நடுவில் ஹிந்துக்கள் இருந்து வருகின்றனர். ஆலய ஆராதனையின் மேன்மையை அவ்விருவகையினருக்கு மிடையில் ஹிந்துக்களாற் கண்டு காப்பாற்றிக்கொள்ள முடியவில்லை. அவ்வேலாமையாற்றான் பிரம சமாஜம் ஆரிப சமாஜம் முதலியன தோன்றலாயின. மற்றவரின் சமயப்பழக்க வழக்கங்களுஞ் சிறிது சிறிதாக நழுவி வருவதும் அதனாலேயேயென்க. அவர்ணருக்கு ஆலயப்பிரவேசங் கொடுக்க வேண்டுமென்பவருட் பலர் பெயரளவில் இசுலாமியருங் கிறிஸ்தவரு மல்லாதவராயிருக்கின்றனரேயன்றி அந்தரங்கத்தில் அவராகவேயிருந்து வருகின்றனர். அவர் எல்லா மதங்களுக்கும் பொதுவான அரசை அம்மதத்தினரோடுசேர்ந்து அம்மதங்களின் ரீதியாகவே நடத்திவருவதைக் கூர்ந்து

கவனித்திடுக. அவரால் தம்கையிலுள்ள அரசையே தம்மதரீதியாக நடத்த முடியவில்லை. அம்மதத்தினர் அப்படி நடத்தவிடவுமாட்டார். மதப்பழக்க வழக்கங்கள் கெட்டுப்போயினவென்று அவர் போடுங்கூச்சலுக்கு அவர்ணருக்கு ஆலயப்பிரவேச மின்மையொன்றே காரணம். அவர்ணருக்கு ஆலயப்பிரவேசங் கிடைத்துவிட்டால் அந்த நிமிடமே ஆலயம் சீருற்றதாகக் கருதப்பட்டுவிடும். அவர்ணருக்குச்சகாயஞ்செய்யவேண்டும், ஆலயம் எப்படிக்கெட்டாலுஞ்சரி என்ற எண்ணமே அத்தொடைநடுங்கி ஹிந்துக்களுக்குண்டு. ஹிந்துக்களின் சமயங்கள் சத்துக்கெடுவதற்கு அவர்களே மூலம். ஆங்கில நீதிமன்றங்கள் சமயா சாரங்களைக்காப்பாற்றியதால் அவைகெட்டனவென்பது உரம்போட்டதாற் பயிர்கெட்டது வேலிபோட்டதாற் பயிர் களவு போயிற்று என்பனபோலும்.

10. அ:— ஏதேனும் ஒரு பழைய வழக்கம் பெரும்பான்மைமக்களால் நிராகரிக்கப்படின் அவர் விருப்பத்துக்கு விரோதமாய் அரசு அவ்வழக்கத்தை அவர்பால் அழுத்தி வைத்துக்கொண்டிருப்பது அவர்முன்னேற்றத்துக்குத் தடையேயாகும்.

ச:— சோவியத்து ரஷியா மிகவும் முன்னேற்றமடைந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. ரஷியர் அந்நியருக்கு அடிமைகளல்லர். அவருக்கு உண்ணச்சோறும் உடுக்கத்துணியும் உறங்கத்துணையும் தடையின்றிக் கிடைத்து வருகின்றன. முன்னேற்றமென்பது அதுதானோ? சமயங்களின் முன்னேற்றம் அதுவன்று. அதன் இலக்கணம்முழுவதும்வேறு. அத்தகைய முன்னேற்றத்துக்கு இயைந்த சமயப்பழக்க வழக்கத்தை இடைப்பட்ட பெரும்பான்மைமக்கள் நிராகரித்தால்அவர் அறியாதவரே.சமயங்கள்உண்டான அன்றே அவற்றின் பழக்க வழக்கங்களும் உண்டு. அவற்றைநிராகரிக்கிற பெரும்பான்மைமக்கள்செத்தபிறகும் அவை இருக்கவேசெய்யும் சமயங்கள் உள்ளவரையும் அவற்றின் பழக்க வழக்கங்களுக்கு ஆயுள் நிச்சயம் அவற்றிற் பற்றுக்கொள்ளாதவர் தம்மை அச்சமயங்களினின்றும் விலக்கிக் கொள்வதே நியாயம். சமயங்களைவிட்டுச் சமயப் பழக்க வழக்கங்களை அழிக்கப்பார்ப்பது சமயங்களையே அழிப்பதாகும். ஒருசமயத்து அபிமானிகள் அச்சமயத்திற் கெடுமதியுடைய நவீனர்களைத்திருத்தி அச்சமயப் பழக்க வழக்கத்திலேயே யிருத்தவேண்டும். அரசும் அதற்கு உதவுவதே முறை. சாஸ்திரோக்தமல்லாதபழக்கவழக்கங்களைப்பற்றி இங்குப்பேச்சில்லை

11. அ:— ஒருஜில்லாவிலுள்ள பெரும்பான்மையாலயப்பிரவேசகர்கள் சம்மதித்தால் மட்டும் அவர்ணருக்கு ஆலயப்பிரவேசங்கொடுக்கலாம். சட்டமும் அவ்வளவுக்கே செய்யப்படுகிறது. அது குற்றமன்று. அவர்ணரை ஆலயத்துள் விடவேண்டுமென்று சவர்ணரை நிர்ப்பந்தித்துச் சட்டஞ் செய்தால்மட்டும் அது தப்பாகும்.

ச:— வேண்டுமானல் ஒருவன் தன்சொந்த ஆஸ்தியைத் தன்பிள்ளை யல்லாதவனுக்குங்கொடுக்கலாம். ஆனல் அவன் தன் பிதிரார்ஜிதத்தைத் தன்பிள்ளையிருக்கும்போது தன்னிஷ்டப்படி வேறொருவனுக்குக் கொடுக்க முடியாது. சட்டத்தில் அதற்கிடமில்லை. அப்படியே ஒவ்வொருகாலத்திலு முள்ள மக்களுக்குச் சமய நிலையங்கள் பிதிரார்ஜிதங்களே. அவர்களுக்குச் சந்ததிகள் வந்துகொண்டிருக்கும். ஆகையால் அம்மக்கள் அந்நிலையங்களை அப்படியப்படியே காப்பாற்றிச் சந்ததிகளிடங் கொடுத்துவிட்டுப்போக வேண்டும். தம்மிஷ்டம்போல் அவற்றின் சொரூபங்களைக் கெடுத்தல் அவருக்கு அநியாயம். அவ்வநியாயவான்கள் சந்ததியை விரும்பிப்பெறாத கோஷ்டியையே சேர்ந்தவராவரென்க. பெரும்பான்மை மக்களின் அறியாமையைப் புகலாக வைத்துக்கொண்டு ஒரு காரியத்தைச் சாதித்துக் கொள்வதும் அவர்களை நிர்ப்பந்தித்து அதனைச்சாதித்துக் கொள்வதும் அநேகமாய் ஒன்றே. ஆடு மாடுகளிடமும் சம்மதம் (Vote) வாங்குவதா யிருந்தால் அக்கை தங்கைகளை மணந்துகொள்ளலாமென்ற சட்டத்தையும் பிறப்பித்தல் கூடும்.

12. அ:— சமூகத்தினின்றும் அவர்ணர் விலக்கப்பட்டிருப்பது அவருக்கு ஆலயப்பிரவேசம் அளித்தலால் நீங்கும்.

ச:— சனன மரணத்தீட்டுடையாரும் விலக்கமான ஸ்திரீகளும் சமூகத்தினின்று சிலகாலமாவது நீக்கப்பட்டவரே. அக்காலத்தில் நீங்கின வரும் நீக்கினவரும் சம்மதித்த தீண்டாமையே அது. அத்தீண்டாமை அவ்விருதிறத்தாரின் மனவொற்றுமையைக் கெடுக்கவில்லை. அப்படியே அவர்ண சவர்ணத் தீண்டாமையும் இருந்துவருகிறது. ஒருயிரின்மொத்தப் பிறவிகளில் ஒருபிறவி சிலகாலமே யுடையது. அவர்ண சவர்ணத் தீண்டாமை அவர்ணரின் மறுபிறப்பால் மாறவல்லது. ஆயினும் அது நெடுங்காலத் தீண்டாமையாகாது. அவர்ணத்தீண்டாமையை விலக்க வல்ல ஆலயப்பிரவேசம் சனன மரணத்தீண்டாமையையும் விலக்க ஸ்திரீ களின் தீண்டாமையையும் ஏன் விலக்காது? திருவாங்கூர் மன்னர் அதை ஏனோ கவனித்திலர். மற்ற அரசராவது கவனித்து முதலில் அதற்கொரு சட்டஞ்செய்க.

13. அ:— அவர்ணருக்கு ஆலயப்பிரவேசங் கிடைத்துவிட்டால் ஆலயத்தில் அவருக்கும் உத்தியோகம் கிடைக்கலாம்; அவரின் பொருளா தார நெருக்கடி கொஞ்சமாவது சீர்ப்பட வழியுண்டு.

ச:— பணக்காரரின் பணத்தை ஏழைகளுக்குங்கிடைக்குமாறு பங்கு போட்டாற்றான் ஏழைகளின் பொருளாதார நெருக்கடிதீரும். அந்த

முறையில் துறைமுகவரும்படியிலுள்ள மிச்சப்பணம்வேறுசெலவுகளுக்கும் உதவுமாறு சட்டஞ்செய்யப்பட்டுள்ளது. அப்படியேகோயிற்பணங்களையுஞ் சட்டஞ்செய்து சுவீகரித்துக்கொள்ளலாம். அதைவிட்டு ஆலயத்தின் உத்தேசியத்தைக்கெடுப்பானேன்?

14. அ:— சர்வபுராதீன ஆலயங்களையும் சவர்ணருக்கே சொந்தமெனச் சொல்வது ஹிந்து சமூகத்திற்கே ஆபத்தாகும்.

ச:— எப்படி?

15. அ:— அந்நிய மதங்களிலிருந்து ஹிந்துவானவர், பௌத்தர், ஜைனர் முதலியவரெல்லாம் ஹிந்துக்கோவிலில் நுழையவில்லையா? அவருட் பலர் அவர்ணராகவுமிருக்கலாமே. அங்ஙனமாக, ஹிந்துக்களாகவேயிருந்துவரும் அவர்ணர் ஹிந்துக்கோவிலில் ஏன் பிரவேசித்தல் கூடாது?

ச:— ஜைனர் பௌத்தர் முதலியோர் ஹிந்துக்கோவிலிற் பிரவேசிக்கலாமா? கூடாதா? ஆமெனின் அதைஎடுத்துக்காட்டவேண்டாம் கூடாதெனில் ஹிந்துக்களின் பயங்கொள்ளித்தனமும் பௌருஷக் குறைவுமே அதற்குக்காரணமென்பது சித்தமாகும். பிறர் கண்டு அஞ்சக் கூடிய ஆண்மை ஹிந்துக்களிடமிருந்தால் அவரெல்லாம் கோயிலுக்குள் வரவே மாட்டார். ஆகையால் தம் கோயிலில் ஹிந்துவல்லாதவர் நுழைதல் கூடாதென்று முதன்முதலிற் சட்டஞ்செய்து கொள்வதே முக ரோமம் முளைத்த ஹிந்துக்களுக்குத் தகும். ஹிந்துக்கள் தம் பேடித்தனத்தால் அந்நியரைத் தம் கோயிலுக்குள்விட்டுவருவதோடல்லாமல்சட்டஞ்செய்தும் விடவேண்டுமா? என்ன புத்தி!

16. அ:— சில கோயில்களிற் சில சமயங்களில் அவர்ணருக்குப் பிரவேசங்கொடுக்கப்படுகிறதே?

ச:— அப்பிரவேசத்துக்குப்பிறகு அக்கோயில்களிற் பிராயச்சித்தம் நடக்கும். அதற்குச் செலவு அதிகம். அவர் எப்போதுமே கோயிலுள் விடப்பட்டால் பிராயச்சித்தமும் எப்போதும் நடந்துகொண்டிருக்க வேண்டுவதுதான். அதற்குப்பணமெங்கே? மற்றக் கிரியைகள் நடப்பது எப்போது?

17. அ:— ஹிந்துக்கள் நலனடைய வேண்டுமாயின் அவர்ணர் விடுதலையடையவேண்டும்.

ச:— ஹிந்துக்கள் நலனடைய வேண்டுமாயின் அவர்ணரின் ஆலயப் பிரவேச விருப்பம் ஒழியவேண்டும்.

18. அ:— அவர்ணருக்கு ஆலயப்பிரவேசம் கிடையாவிட்டால்

அவர் கிறிஸ்தவராகவும் இசுலாமியராகவும் போய்விடுவதாகவும் பயங்காட்டு கின்றனர் அவர் போய்விட்டால் ஹிந்துக்களின் கூட்டமும் பலமுங் குன்றிவிடும்.

ச:—சவர்ண ஹிந்துக்களின்பெண்களைத் தமக்கே கொடுக்கவேண்டு மென்றும் மறுத்தால் தாம் கிறிஸ்துவராகவும் இசுலாமியராகவும் போய் விட நேருமென்றும் அவர்ணர் பயங்காட்டினால் சவர்ணர்ஹிந்துக்கூட்டத் தையும் பலத்தையும் போற்றிக் கோடற்பொருட்டு அதனைச்செய்யத் தயாராஞ? காங்கிரசில் அயோக்கிய அங்கத்தினர் கோடிக்கணக்காக இருந் தாலும் பரதகண்டத்துக்கு விடுதலைகிடையாதென்பது சத்தியம்; யோக்கிய மான அங்கத்தினர் ஆயிரவரிருந்தாலும் போதும்; அவரே சுயராஜ்யங் கொண்டுவர வல்லார்; கொண்டு வரவுஞ் செய்வர் என்கிறார் காந்தி. அந்த நியாயத்தை ஹிந்து அபிவிர்த்தியிலும் பொருத்தி உண்மை காண்க. மேலும் ஆலயப்பிரவேசம் மதமாற்றத்தைத் தடுக்குமா? அப்படியானால் எத்தனையோ சவர்ணர் கிறிஸ்தவராகவும் இசுலாமியராகவும் போகக் காரணமென்ன?

19. அ:— ஆலயத்தை நிர்மாணித்து அதற்கு ஆஸ்திகளை விட்ட பூர்வீகர் இப்போதிருப்பாராயின் அவர் அவர்ணருக்கு ஆலயப்பிரவேசத்தை உடன் படவே செய்வர்.

ச:— மாட்டவே மாட்டார்.

20 அ:— ஆலயத்துட் பிரவேசிப்பதற்கு அவர்ணருக்கும் பாத்தி யதை யுண்டென்று சொல்லி அவர் ஆலயப்பிரவேசத்துக்குப் போராட வில்லை. அவர்ணரும் சவர்ணரும் சமமாயிருந்து வணக்கஞ்செய்தால் ஹிந்து சமூகம் ஒற்றுமையாயும் பிளவுபடாமலுமிருக்கும் எல்லாரும் விரும்புவது அதுவே.

ச:— தத்தமக்குப் பாத்தியதையுள்ள இடங்களிலிருந்துசெய்யப்படும் வணக்கமே சால்புடையது. அதிக்கிரமம் அக்ரமமே. அவ்வணக்கம் வேற் றுமைக்கே இடஞ்செய்யும்.

21. அ:— புராதன ஆலயக் கோட்பாடுகளை இக்காலத்துப் பல்லா யிரமக்களின் நலனை யுத்தேசித்து மாற்றிக்கொள்வது குற்றமாகாது.

ச:— இக்காலத்துப் பல்லாயிரமக்கள் எதிர்காலத்துப் பல்கோடி மக்களின் முன் மிகமிகச் சிறு தொகையினரே. ஆலயக்கோட்பாடுகளை அச்சிறுதொகையினர் பொருட்டு மாற்ற முனைப்பது சிறுபான்மையினரின் எண்ணத்தைப் பெரும்பான்மையினர்பால் அழுத்துவதாய் முடியும். அது அரசியல் முரண்.

மங்களத்தின் அடிப்படை.

(போத்தனூர் வேலூர், திரு, R. வேங்கடநாராயணசர்மா அவர்கள்.)

ஆரம்பித்துத் தொடரும் ஒவ்வொரு மங்கள காரியங்களிலும், நம்பிக்கையான்பாதம் தொழுதல், கடமையும் முறையுமாகுமென நம்முன்னோர்கள் முதல் நாமும் வரிசையாக வருகின்றோம். இனி, நம் சந்ததியார்கள் அவ்விதம்செய்துவருவார்களோ என்ற சந்தேகம் நமக்கு இப்பொழுது உண்டாயிருக்கிறது. தற்காலம் பெருகிவருகின்ற சினிமாக்களிலும் குறுகிவருகின்ற நாடகங்களிலும் பிள்ளையார், சரஸ்வதி, சூத்திரதார் முதலானவர்களைப் புறக்கணித்து வருகிறார்கள். நாமும் அவற்றைப் பிரியமாகக் காணச் செல்கிறோம். கடமையையும் முறையையும் புறக்கணித்துச் செய்யப்படும் எந்தக் காரியங்களிலேனும் எக்காலத்திலாவது எவரேனும் சித்திபெற்றதுண்டோ? ஆகவே மங்களத்திற்கு அடிப்படையாகவுள்ள காரியம் கடமையில் ஒழுகுதலேயாகும். நாளிதுவரை நம்மவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பெருநூல்களெல்லாம் அவ்வாறே ஒழுகிக்காட்டுகின்றன.

"கற்றதனாலாய பயனென் கொல்வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்".

என்ற திருக்குறளைச் சிந்திக்க. ஜீவயாத்திரையின் நோக்கம் தனக்குவமையில்லாதான் தாள்சேர்தலன்றிவேறில்லை. கல்வி இவ்வறிவை நமக்கு அளிக்கின்றது. அறிவு பொருள்களின் பெருமை சிறுமைகளைவிளக்குமேயன்றி, பொருள்களை உண்டு செய்யாது. ஒழுக்கமே வஸ்துக்களைக் கூட்டுவிக்கும். 'ஒழுக்கம் விழுப்பந்தரலா னொழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்றார் நாயனார். உயிருக்கும் உடலுக்குமுள்ள சம்பந்தத்தை உள்ளபடி அறிந்து இனி உடலெடுக்காத தன்மையே கல்வியும் ஒழுக்கமுமாகும்.

இனி இவ்வொழுக்கம் கூட இளமையே ஏற்றகாலம். இக்கால இளைஞர்கள் எவ்வளவு தூயதன்மையுடைய ஆசிரியர்களிடத்துக் கல்வி பயின்று வருகிறார்கள்? நன்னூல் தொல்காப்பிய முதலான முதனூல் வழிநூல்களிற் கூறப்பட்ட ஆசிரிய இலக்கணங்களமைந்த அற்பமேனுமுள்ள ஆசிரியர்கள் எவ்வளவுபேர்களிருக்கின்றார்கள்? இந்நிலைமையில் நாம் எவ்வளவு நன்மை எதிர்பார்க்கக்கூடும்? ஆஸ்திகசிலர்கள் திரளாக வெளியில் வந்தால் அவ்வரவே மங்களத்தின் அடிப்படையாகும்.

பிரார்த்தனை.

ஒருவர்க்கும் விரோதியா யில்லாதிருப்பேனாக; அழியாத நிலையான பொருளுக்கு நான் தோழனாயிருப்பேனாக!

எவனுக்கும் தீங்கு செய்ய நினையாதிருப்பேனாக! எவரேனும் எனக்குத் தீங்கிழைக்க நினைத்தாலும், நான் புண்படாமலும் அவர்க்குக் கேடு விளைவிக்கும் அவசியமில்லாமலும் தப்பித்துக்கொள்வேனாக!

நலம் எதுவோ அதையே நான் விரும்பித் தேடி அடைவேனாக!

எல்லோருடைய ஆனந்தத்தையும் நான் பிரார்த்திப்பேனாக! ஒருவர் மீதும் பொறாமை கொள்ளாதிருப்பேனாக!

எனக்குத்தீங்கிழைத்தவனது துயரத்தைக்கண்டு மனமகிழாதிருப்பேனாக! நான் தவறானதைச் செய்தவுடனே, சொன்னவுடனே, பிறர் என்னைக் கண்டிக்கும் வரை காத்திராமல், அதற்குப்பதில் நன்மை செய்யும் வரை என்னையே எப்பொழுதும் கண்டித்துக்கொண்டிருப்பேனாக!

எனக்காவது எனது விரோதிக்காவது கேடுவிளைக்கும் வெற்றியை நான் பெறாதிருப்பேனாக!

உயர்ந்தோர் கூறும் உறுதிமொழிகள்.

உலகத்தில் இருபது விஷயங்கள் செய்தற்கு அருமையானவை; அவையாவன:— ஏழையாயிருந்தும் தருமஞ் செய்தல்; செல்வமிருந்தும் பெரியோராயிருந்தும் ஞானமாக வாழ்தல்; விதியை வெல்லுதல்; சாஸ்திரங்களின் உண்மையைத் தரிசித்தல்; புத்தர் அவதரித்திருக்கும்போது பிறத்தல்; காமத்தை அடக்கி ஆசையைத் துரத்துதல்; இனிய பொருள் ஒன்றைக் கண்ணுற்றகண்டும் அதைப் பெற முயலாதிருத்தல்; முரட்டுத்தனமாயிராது பலமுடையோனாயிருத்தல்; கோபமில்லாமல் அவமானத்தைப் பொறுத்தல்; உலகத்து மனம் பற்றாமல் உலகில் வாழ்தல்; ஒரு விஷயத்தை அடிவரை ஆராய்தல்; அறிவிலாரை இகழாதிருத்தல்; தற்பெருமையை அறவே அழித்தல்; நல்லவனாயிருக்கும்போதே கற்றவனாயும் சாமர்த்தியமுள்ளவனாயும் இருத்தல்; மதவாழ்க்கையில் மறைந்துள்ள கொள்கையைக் காணல்; களிகூராது ஒருகோரிக்கையை நிறைவேற்றல்; தந்திரமாக வாழ்தலை ஒழுங்கான முறையில் நடத்திக்காட்டல்; பிறரை மனம் மாறும்படிச் செய்து அவர்களைக்காப்பாற்றல்; உள்ளும் புறமும் ஒன்றாயிருத்தல்; வழக்காடலைத் தவிர்த்தல்.

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்.

உ

ஆணவமலமே இருவினைகட்கும் நிமித்தகாரணமாம்.

(சுதுமலை, சிவஸ்ரீ, ச. பொன்னுஸ்வாமிக் குருக்களவர்கள்)

ஆணவமலம் ஆன்மாவைத்தன்வசப்படுத்தி யான் எனது என்னுஞ் செருக்கினையும் விருப்பு வெறுப்புக்களையும் கொடுக்கும் பொழுது அம்மனத்தின்வசப்பட்ட ஆன்மா இதம் அகிதம் என்னும் நல்வினை தீவினைகளைச்செய்யும். அது எது போலு மென்னில், கட்குடித்தோன் அக்கள்ளின் செயலால் அறிவுமயங்கி இவை தக்கன இவை தகாதன என்னும் அறிவின்றி நேர்ந்தனவெல்லாஞ் செய்துபோதல்போல, உயிரும் ஆணவமலத்தின் வசப்பட்டு அறியாமைகொண்டு இது நல்லது இது தீயது என்றறியாது புண்ணிய பாவங்களைச்செய்யும்.

அநாதியில் ஆணவமலத்தோடு கூடி அறிவும், இச்சையும், தொழிலும் நிகழப்பெருமல் மயங்கிக்கிடந்த ஆன்மா அம்மலத்தின் சேட்டைநீங்குமாறு தனக்குத்துணைசெய்யவல்ல கன்மமாயைகளை விரும்ப நிமலன் அவற்றைக்கூட்டிக் கலை, வித்தை, அராகங்களினால் மலசத்தியைச் சிறிது ஒதுக்கி அறிவு, இச்சை, தொழில்களைச்சிறிது வெளிப்படுத்திக் கிஞ்சிஞ்ஞத்துவ கிஞ்சித்கர்த்திருத்துவ சத்தியுண்டாகும்படி செய்தமையால், கிஞ்சித்கர்த்திருவசத்தியடைந்த ஆன்மா கன்ம மலத்தோடு கூடிக்கன்மங்களைச் செய்வதாகிறது.

உயிர் காமியகன்மஞ்செய்தற்கு ஏற்ற அகந்தையையுண்டாக்கி நிமித்தமாய் நின்றது ஆணவமலமாதலால், நல்வினை தீவினைகளை உயிர் செய்தற்கு நிமித்தகாரணமாயிருப்பது ஆணவமலமேயென்று சொல்லப்படும். இன்னும் ஆணவமலத்தின் தீயகுணங்களே ஒருவனைத் தீவினை செய்ய ஏவுகின்றன வென்பதையறிக.

ஆணமலத்தின் சத்தி பலவகைப்பட்டுப் பலவிதகுணங்களை ஆன்மாவுக்குக் கொடுத்துப் பலவிதகன்மங்களைச் செய்யுமாறு ஏவுதலால், அம்மலத்தின் வழியாகவந்த கன்மங்களும் அனந்தவிதமாயின. அவையெல்லாம் தத்தம் பாகுபாட்டிற்கேற்ற பலன்களைக் கொடுக்கு நிமித்தம் பல பல புவனங்களிலே சென்று அடைய வேண்டியனவாயின.

தனுகரணங்கள் பெற்ற சகலத்திலேயே அத்தொடர்புகள் வருதலாலும், கன்மமலத்திற்கும் உயிர்க்குமுள்ள சம்பந்தத்தை ஆணவமலத்துக்குள்ள சம்பந்தம்போலச் சகச மென்று சொல்லாமல் ஆகந்துகமென்று சொல்வார்கள். ஆகந்துகம்—சேர்க்கை.

ஆன்மா அநாதியே தனக்குயிராயுள்ள சிவத்தைப்பற்றாது தனக்கு வேறாய்ச்சடமாயுள்ள மலத்தைப்பற்றி நின்றது. அந்த மலத்துக்கும் ஆன்மாவுக்குமுள்ள சம்பந்தமாகிய தொடர்பு சகசமென்று சொல்லப்படும். ஆன்மா அநாதியே சிவத்தைப்பற்றி இருந்தால் சிவத்தின் குணமாகிய ஞானாநந்த நிலையையடையும். அப்படியின்றி ஆன்மா அநாதியே மலத்தைப்பற்றியபடியால், மலம் தன் குணமாகிய அறியாமையைக்கொடுக்க ஆன்மா அறிவிருந்தும் அறியாது மயங்குவதாயிற்று. கண் எல்லாவற்றையுங் காணும் இயல்புடையதாயினும் இருளிலகப்பட்ட பொழுது ஒன்றையுங் காணமாட்டாமைபோல, ஆன்மா அறிவுடையதாயினும் மலத்தின்வயப்பட்ட இந்த நிலையில் ஒன்றும் அறியாதிருக்கும்.

ஒவ்வொரு ஆன்மாவுக்கு ஒவ்வொரு ஆணவமலமாய் எண்ணில்லாதஆன்மாவுக்குஎண்ணில்லாத மலம் இருந்து மறைப்பதல்ல. எண்ணில்லாதனவாகியகண்களை ஒரேயிருள் எப்படி மறைக்கிறதோ அப்படியே எண்ணில்லாத ஆன்மாக்களையும் ஒரே மலம் மறைத்து நிற்கும். மல மறைப்பினாலே ஆன்மா தன்னையுமறியாது; முதல்வனாகிய சிவத்தையுமறியாது; தன்னை மறைக்கும் பாசத்தையும் அறியாது.

ஆணவமல மறைப்பினாலே வருந்திய ஆன்மா அம்மறைப்பினின்று நீங்கும்படி தன்னறிவு வெளிப்படுதற்கு வியஞ்சகமாகிய மாயா தனுகரணங்களை விரும்பிற்று; தன்செயல் வெளிப்படுதற்கு ஏதுவாகிய கன்மத்தையும் இச்சித்தது.

ஆன்மா ஆணவமலத்தோடு கூடித் தனியே நிற்பது கேவல நிலையென்றும், மாயாதத்துவங்களோடு கூடி நிற்பது சகல நிலையென்றும் சொல்லப்படும்.

"ஒன்றதா யநேக சத்தி யுடையதா யுடனா யாதி
யன்றதா யான்மா வின்ற னறிவொடு தொழிலை யார்த்து
நின்றுபோத் திருத்து வத்தை நிகழ்த்திச் செம் பினிற்களிம்பேய்ந்;
தென்றுமஞ் ஞானங் காட்டு மாணவ மியைந்து நின்றே.

இ - ள். எண்ணிறந்த சத்திகளுடைத்தாய் எண்ணிறந்த உயிர்களினுஞ் சேர்ந்து செம்பிற்களிம்புபோல அநாதியே விரவிநிற்பதொன்றாய்க் கேவலாவத்தையில் ஆவாரகசத்தியால் அவ்வுயிர்களின் அறிவையுந்தொழிலையுமறைத்துநின்று சகலத்தில் அதோநியாமிகாசத்தியாலே போகநுகர்ச்சிக்கு வினைமுதலாதற்றன்மையை நிகழ்த்தி எப்பொழுதுங்காரணமாய் நின்று, அஞ்ஞானத்தை விளைவிக்கும் ஆணவமலம்என்பது.

திருக்கல்யாண உண்மை விளக்கம்.

(திரு, ந. சிவகுருநாத பிள்ளை யவர்கள்.)

கல்யாணம் என்னும் சொல் சுபம், மகிழ்ச்சி முதலிய பல பொருள்களைத் தருமேனும் சிறப்பாக ஆண்-பெண் இருபாலார் மணத்தையே குறிப்பதாகும். ஈண்டுக் கல்யாணம் என்னும்சொல் லுடன் 'திரு' என்னும் அடைமொழி புணர்ந்திருத்தலின் அது இறைவன் இறைவியின் திருமணத்தையே குறிப்பதாகும். "சிவன் அரு வுருவுமல்லன் சித்தினோடு அசித்துமல்லன்.............தவமுத லியோக போகந் தரிப்பவனல்லன்" என ஓதப்பெறும் இலக்கண முடைய இறைவன், உலகத்து மக்களைப் போன்று தான் ஒரு பெண்ணை மணந்து போகியாய்க்கூடி வாழ்வன் என்று கூறுதல் பொருந்துமாறு யாங்ஙனம்? எனின்; அவ்வுண்மையைச் சிறிது விளக்குகின்றாம்.

அநாதியே ஆணவமலத்தில் அழுந்தித் துன்புறும் உயிர்களை வாழ்வித்தற் பொருட்டு இறைவன் அவற்றிற்குத் தனுகரண புவன போகங்களைப் படைத்துக் கொடுத்து அறிவை விளங்கச்செய்து சிற்றறிவு நிலைக்கேற்ப சிறு போகங்களையும், விரிந்த அறிவுநிலைக் கேற்ப வீடுபேற்றையும் அருளிச் சிற்றின்ப பேரின்பங்களை நுகர் விப்பன். அதனோ டமையாது கருணையோடு தான் உயிர்க்குயிராய் நின்று அவற்றைச் செலுத்துவிப்பன். இறைவன் உயிர்க்குயிராய் அவையே தானேயாய் விளங்கும் தன்மையால் உயிர்கட்குப் போகத்தையருளும் நிலையில் போகியாகவும், யோகத்தையருளும் நிலையில் யோகியாகவுமிருத்தல்வேண்டும் என்பது இன்றியமையாத தாகின்றது.

"போகியா யிருந்து யிர்க்குப் போகத்தைப் புரித லோரார்"

என்னும் சிவஞானசித்தி வாக்கும்,

"பெண்பா லுகந்திலனேற் பேதா யிருநிலத்தோர்
விண்பா லியோகெய்தி வீடுவர்காண் சாழலோ"

என்னும் திருவாசகமும் இவ்வுண்மையை வலியுறுத்தும். எனவே, இறைவன் உயிர்கட்குப் போகத்தை யருளுதற் பொருட்டு உமா தேவியாருடன் கூடிப் போகியாகவும், யோகத்தை அருளுதற் பொருட்டுக் கல்லாலின்கீழ் யோகியாகவும் திருமேனி கொள்ளி னும் அத்திருமேனிகள் தோல், எலும்பு, நரம்பு, தசைமுதலிய எழு வகைத்தாதுக்களால் ஆக்கப்பெற்ற நமது தூய்மையில்லாத மாயா உடல்போன்றனவல்ல. அவை அருள் (ஞான) வடிவங்களேயாகும்.

இனி, இறைவனது போகவடிவத்தின்கண் காணப்பெறும் உமாதேவியார் உலகத்துப் பெண்கள் போன்ற உயிர்த்தொகுதியைச் சேர்ந்தவரன்று. தீயினின்றும் வேறுபடாத சூடுபோன்று இறைவனை விட்டு நீங்கப்பெறாத அவனது அருட்சத்தியேயாம். ஆதலின் உமாதேவியார் வடிவமும் ஞானவடிவமேயாகும். இங்ஙனம் இறைவன், தானும் தன் அருட்சத்தியுமே ஆணாகவும் பெண்ணாகவும் வடிவங்கொண்டு உலகத்துக்கு அம்மையப்பராக விளங்குதலுடன் வேற்றுப்பொருள் போல் தம்முட்கூடி மகிழ்ந்து திருவிளையாடலும் புரிவன். இவ்வுண்மையை,

"இணையெரித் தேவுந் தானே எரிவளர்ப் பவனுந் தானே
உணவுகொள் பவனுந் தானே யாகிய வொருவன் வையம்
புணர்வுறு போக மூழ்கப் புருடனும் பெண்ணு மாகி
மணவினை முடித்தா னன்னான் புணர்ப்பையார் மதிக்க வல்லார்."

எனத்திருவிளையாடற்புராணம்தெளிவாகக்கூறுகின்றது. அற்றேல், உமாதேவியார் இறைவனினின்றும் பிரிக்கப்படாத சத்தி வடிவமாயின் ஒரு காலத்தில் தக்கன் மகளாராகவும், பிறிதோர் காலத்தில் மலையரயன் மகளாராகவும் மற்றோர் காலத்து மலையத்துவச பாண்டியன் மகளாராகவும் பிறந்து வளர்ந்தமை என்னை? இதனால் உமாதேவியார் பிறப்புஇறப்புடைய உயிர்கள்போலன்றோ கொள்ளக்கிடக்கின்றனரெனின்; அற்றன்று. தக்கனாதியர்செய்த தவத்துக்கிரங்கி அங்ஙனம் திருஅவதாரம் செய்தமை ஒரு திருவிளையாடலே யன்றிப் பிறிதில்லை யென்பது,

"தெள்ளமுத மென்மழலை சிந்தவிள மூரல்
முள்ளெயி றரும்பமுலை மூன்றுடைய தோர்பெண்
பிள்ளையென மூவொரு பிராயமொடு நின்றாள்
எள்ளரிய பல்லுயிரு மெவ்வுலகு மீன்றாள்."

எனத் திருவிளையாடற் புராணத்தில் உமாதேவியாரின் திரு அவதாரம் பற்றிக் கூறும் செய்யுளால் அறியக்கிடக்கின்றது. இங்ஙனம் பிறந்து வளர்ந்த காலங்களில் சிவபெருமான் எழுந்தருளி உமாதேவியாரை மணந்தமையே திருக்கல்யாணமாகும். இத்தகைய திருவிளையாடல்களை நமக்கு உணர்த்தும்பொருட்டே திருக்கோயில்களில் அவை விழாக்களாகக் கொண்டாடப்பெறுகின்றன.

—சித்தாந்தம்.

அன்புரிமைக் கடிதம்.

(புதுவயல், திருவாளர், அ. ப. சி. மு. சின்னைய செட்டியாரவர்கள்)

ஓம் கணேசாய நம:

பொங்கும் மங்களம் எங்குந் தங்குக. மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

திட்டைச் 'சிவநேசன்' இராமசாமி செட்டியாரவர்கட்கு,

அறிவிற் சிறந்த ஐயா!

அன்பு ததும்பிய தங்கள் கடிதங் கிடைக்கப்பெற்றுப் பேருவகை யுற்றேன்.

சிவாலயத் திருப்பணியாகிய பெருந்தொண்டில் ஈடுபட்டிருந்தும் சிவநேசன் பத்திரிகையையும் திறமையுடன் நடத்தி வரும் தங்கள் ஆற்றலைப் பெரிதும் பாராட்டுகின்றேன்.

சிவநேசன் தொடக்கத்தில் சிவநேசனைப்பார்த்ததும் என்னுள்ளெழுந்த உணர்ச்சியை எங்கோனருளால் ரெங்கோனிலிருந்து தங்கட்கு வரைந்திருந்ததைத் தாங்கள் இன்னும் நினைவில் வைத்திருந்து இப்போது தங்கள் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறீர்கள். யாண்டுபலவாகியும் தாங்கள் மறவாது வரைந்திருப்பது தமியேனிடம் வைத்துள்ள அன்பின் பெருக்கேயாம். தாங்கள் சிவபரம்பொருளுக்கு ஆலயத்திருப்பணித் தொண்டும், சிவநேசன் பத்திரிகை மூலம் சிவஞானத்தைப் பரப்புந் தொண்டும் செய்துவருவது கிடைத்தற்கரிய பெரும் பேறாகும்.

அடியேன்பால் தாங்கள் வைத்துள்ள அன்பிற்கு என்றும் நன்றியறிதலுடையவனாகஇருக்கின்றேன். வாழ்கசீரடியாரெல்லாம்.

இனித்தமுடைய இக்கடிதம் அன்பின் அடையாளமாக மகர சங்கராந்தியில் வந்து மகிழ்வூட்டியது. அன்பரவர்கள் நல்லுரைக் கடிதந் தந்த நன்றியை என்றும் மறவாதிருக்கவே அதனைச் சிவநேசனில் பதித்துளேன்.

மதிப்புரை மஞ்சரி.

இராச ராசேச்சுவரமும் பிற சோழர் கோவில்களும்:— இந்நூல் தஞ்சை அரசர் திருக்கோயில் கண்காணிப்பாளராகிய திருவாளர், ஜே. எம். சோமசுந்தரம்பிள்ளை பி. எ. பி. எல். அவர்களால் எழுதிப்பதிப்பித்து இராச ராச சோழமன்னனின் சதயத்திருநாளில் வெளியிடப்பெற்றது. இராச ராசேசுவரத்தின் சிற்ப நுட்பத்திறங்களையும், செய்வித்த அரசனின் சீரிய செயல்களையும், தேவதானத்துக்கு வழங்கிய திருவாபரண வரிசைகளாகியவைகளையும், அவைகளை விளக்கும் கல்வெட்டுக்களையும், இராசராச சோழமன்னராலும் ஏனைய சோழ மன்னராலும் இயற்றப்பெற்றுள்ள திருக்கோயில்களையும், கொடுக்கப்பெற்றுள்ள நிபந்தங்களையும்தொகுத்து விளக்கிச் சித்திரப்படங்கள் பத்துச்சேர்த்துள்ளது. இது கோவில்களின் பண்டைய வரலாறுகளையும் பிறவற்றையும் பலரும் அறிந்துகோடற்கு ஏற்ற பெற்றியுடையதாயிருக்கிறது. இவ்வாறே வரலாறுகளை விளக்கி வெளியிடுவது திருக்கோயிற் கண்காணிப்பாளர்களின் சீரிய செயலாகும். இம்முறையைத் திருக்கோயிற்கண்காணிப்பாளர்களாகிய அனைவரும் பின்பற்றுவார்களாயின் திருக்கோயில்களின் செயல் முறைகள் சிறப்புறுதற்கு ஏதுவாகும்.

வாக்கிய பஞ்சாங்கம்:- யாழ்ப்பாணம் கொக்குவில் இரகுநாதையரவர்களின் தத்தபுத்திரர் பிரமஸ்ரீ சிவராமலிங்கையரவர்களால் கணிக்கப்பெற்ற பிரமாதி வருஷ வாக்கிய பஞ்சாங்கம் வரப்பெற்றோம். திதி நக்ஷத்திரம் யோகம் கரணம் விரதாதி நிரூபணம் ஆதியவைகளைச் செவ்வேவிளக்கி மேலும் 137 விஷயங்களைக்கொண்டு 88 பக்கங்களில் வழக்கம்போல் வெளியிடப்பெற்றுளது. வரன்முறை பிறழாது வெளிவரும் பஞ்சாங்கங்களுக்கெல்லாம் இதுவே முதன்மையானதென்னலாம். எண்பத்திரண்டாண்டுகளாக எவ்வித இடையூறுமின்றி வெளியாகிவரும் இதனை யாவரும் கையாண்டு நற்பலன்பெறலாம். விலை சதம் 25. கொக்குவில் இ. சி. இரகுநாதையர் சோதிட பரிபாலன மடத்தில் கிடைக்கும்.

நாட்குறிப்புகள் வரவு:— திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திலிருந்து 1939-ஆம் ஆண்டுக்கு ஒரு நாளுக்கு ஒன்றாக 366-முதல் 730-வரையுள்ள திருக்குறள்களைக் கருத்துரையுடன் குறிப்பிட்டும், பஞ்சாங்கம், குருபூசை நாட்கள், தபாற்குறிப்புகள், சிவில்புரொசிஜர்கோர்ட்டுக்குறிப்புகள், வட்டியட்டவணை, சப்பள அட்டவணை ஆகியவைகள் சேர்த்தும் வெளியிட்டுள்ள திருக்குறள் நாட்குறிப்பும், சென்னையிலிருந்து அச்சுத் தொழிலாளர்களாகிய நார்ட்டன் கம்பெனியார், சோல்டன் கம்பெனியார், நெல்சன் கம்பெனியார், தூத்துக்குடியிலிருந்து பாரதமாதா ஜெனரல் அஷ்யூரன்ஸ் கம்பெனியார், தஞ்சையிலிருந்து அனுமான் அச்சுக்கூடத்தினர் ஆகியவர்கள் வெளியிட்டுள்ள நாட்குறிப்புகளும் வரப்பெற்று மகிழ்வுற்றோம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அற்புதப் பத்திரிகை.

அருட்பெருஞ்சோதி.

உலகத்தினிடத்தே பெறுதற்கு மிகவும் அருமையாகிய மனிதத்தேகத்தைப்பெற்ற நண்பர்களே!

அறிவுவந்த காலமுதல், அறிந்து அறியாத அற்புத அறிவுகளையும், அடைந்து அறியாத அற்புதக்குணங்களையும், கேட்டுஅறியாத அற்புதக் கேள்விகளையும், செய்து அறியாத அற்புதச் செயல்களையும், கண்டு அறியாத அற்புதக்காட்சிகளையும், அனுபவித்து அறியாத அற்புத அனுபவங்களையும், இதுதருணந் தொடங்கிக் கிடைக்கப் பெறுகின்றேனென்று உணருகின்ற ஓர் சத்திய வுணர்ச்சியாற் பெருங்களிப்புடையேனாகி யிருக்கின்றேன்.

நீவிர்களும், அவ்வாறு பெற்றுப் பெருங்களிப்பு அடைதல் வேண்டுமென்று, எனக்குள்ளே நின்று, நிறைந்து எழுந்து வெளிப்பட்ட எனது சுத்த சன்மார்க்க லக்ஷியமாகிய ஆன்மநேய வொருமைப்பாட்டுஉரிமைப்பேராசைபற்றியேஇதனைத்தெரிவிக்கின்றேன்.

இயற்கையிற் றானேயுள்ளவராய் விளங்குகின்றவரென்றும், இரண்டுபடாத பூரணஇன்பமானவரென்றும், எல்லா அண்டங்களையும், எல்லாஉலகங்களையும், எல்லாப்பதங்களையும், எல்லாச்சத்திகளையும், எல்லாச் சத்தர்களையும், எல்லாக்கலைகளையும், எல்லாப்பொருள்களையும், எல்லாத் தத்துவங்களையும், எல்லாத்தத்துவிகளையும், எல்லாவுயிர்களையும், எல்லாச் செயல்களையும், எல்லா இச்சைகளையும் எல்லா ஞானங்களையும், எல்லாப் பயன்களையும், எல்லா அனுபவங்களையும், மற்றெல்லாவற்றையுந் தமதுதிருவருட் சத்தியால் தோற்றுவித்தல், வாழ்வித்தல், குற்றம் நீக்குவித்தல் பக்குவம் வருவித்தல், விளக்கஞ் செய்வித்தல் முதலியபெருங்கருணைப் பெருந்தொழில்களை யியற்றுவிக்கின்றவ ரென்றும், எல்லாம் ஆனவரென்றும், ஒன்றும் அல்லாதவரென்றும், சர்வகாருணியரென்றும், சர்வவல்லபரென்றும் எல்லாம் உடையராய்த் தமக்கு ஒருவாற்றானும் ஒப்புயர் வில்லாத தனிப்பெருந்தலைமை அருட்பெருஞ் ஜோதியர் என்றும், சத்திய அறிவால் அறியப்படுகின்ற உண்மைக் கடவுள் ஒருவரே அகம்புற முதலிய எவ்விடத்தும் நீக்கமின்றி நிறைந்த சுத்த மெய்யறிவென்னும் பூரணப்பொது வெளியில் அறிவார் அறியும் வண்ணங்களெல்லாமாகி விளங்குகின்றார்.

அவ்வாறு விளங்குகின்ற ஒருவரேயாகிய கடவுளை, இவ்வுலகினிடத்தே ஜீவர்கள் அறிந்து அன்புசெய்து, அருளையடைந்து அழி

வில்லாத சத்திய சுகபூரணப் பெருவாழ்வைப் பெற்று வாழாமல், பலவேறு கற்பனைகளால் பலவேறு சமயங்களிலும் பலவேறுமதங்களிலும், பலவேறு மார்க்கங்களிலும் பலவேறு லக்ஷியங்களைக் கொண்டு நெடுங்காலம் பிறந்து பிறந்து, அவத்தை வசத்தர்களாகிச் சிற்றறிவுமின்றி விரைந்து விரைந்து, பலவேறு ஆபத்துக்களினால் துன்பத்தில் அழுந்தி இறந்திறந்து வீண்போகின்றார்கள்.

இனி இச்சீவர்கள் விரைந்து விரைந்து, இறந்து இறந்து வீண்போகாமல், உண்மையறிவு, உண்மையன்பு, உண்மை இரக்கம் முதலிய சுபகுணங்களைப்பெற்று,நற்செய்கையுடையவராய் எல்லாச் சமயங்களுக்கும், எல்லா மதங்களுக்கும் எல்லாமார்க்கங்களுக்கும், உண்மைப் பொதுநெறியாகிவிளங்குஞ் சுத்த சன்மார்க்கத்தைப் பெற்றுப்பேரின்ப சித்திப்பெருவாழ்வில்பெருஞ்சுகத்தையும்பெருங் களிப்பையும் அடைந்துவாழும்பொருட்டு, மேற்குறித்த உண்மைக் கடவுள், தாமேதிருவுள்ளங்கொண்டுசுத்தசன்மார்க்கத்தின் முக்கிய லக்ஷியமாகிய உண்மை விளக்கஞ்செய்கின்ற ஓர் ஞானசபையை இங்கே தமதுதிருவருட் சம்மதத்தாலியற்றுவித்து "இக்காலந் தொடங்கிஅளவுகுறிக்கப்படாதநெடுங்காலம்,அளவுகுறிக்கப்படாத அற்புதசித்திகளெல்லாம்விளங்க,யாமேஅமர்ந்துவிளையாடுகின்றோம்" என்னும் திருக்குறிப்பை வெளிப்படுத்தி, அருட்பெருஞ்சோதியராய் வீற்றிருக்கின்றார். ஆதலின் அடியிற் குறித்த தருணந் தொடங்கி வந்து வந்து, தரிசிக்கப் பெறுவீர்களாயின் கருதிய வண்ணம் பெற்றுக் களிப்படைவதும் அன்றி, இறந்தவர் உயிர்பெற்றெழுதல் மூப்பினர் இளமையைப்பெற்று நிற்றல், முதலிய பல வகை அற்புதங்களைக் கண்டு பெருங்களிப்பும் அடைவீர்கள்.

பிரஜோற்பத்தி௵ தைமீ 13உ வியாழன், பௌர்ணமி பூச நக்ஷத்திரம். (25—1—1872).

சிதம்பரம் இராமலிங்கம்.

திருக்கயிலாயகிரி யாத்திரை:- இப்பெயருள்ள கட்டுரையை முற்றும் வெளியிட்டுப் புத்தகமாக்க முயன்றதில் அதனை ஆக்கியோராகிய சித்பவானந்த அடிகள் "தங்கள் கடிதங்கிடைக்கப் பெற்றேன். திருக்கயிலாயகிரி யாத்திரையைப்பற்றி ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயத்தில் தொடர்ந்து வந்த கட்டுரைகளைத் தொகுத்து ஓர் புத்தகமாக வெளியிட எண்ணி இருக்கிறோம். படங்கள், வழியை விளக்கிக் காட்டும் படம் முதலியன அப்புத்தகத்தில் அமைக்கப்படும். ஆதலால், தாங்கள் அதைப் பிரசுரிக்க வேண்டிய அவசியமில்லை. அன்பு ஏற்றுக்கொள்க" என எழுதியிருக்கின்றார்கள். ஆகையால் தொடர்ந்து பிரசுரிக்கக் கூடவில்லை.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ காசியாத்திரை விளக்கம்.

சிதம்பரம்

மௌன தேசிகராதீனம்

ஸ்ரீமத் சபாபதி சுவாமியவர்களால்

இயற்றப்பெற்றுத்

திருத்தென்குடித்திட்டை

'சிவநேசன்' அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1939

—

உரிமையுள்ளது]

[இதன் விலை அணா ஆறு.

உ

உரிமையுரை.

நனைமலர்த்தண் பொழிலோங்கு திருத்தில்லைப்
பெருந்தலத்தில் நண்ணி நின்று
தனையடைந்த சீடர்பரி பக்குவம்பார்த்
தருண்ஞானம் வழங்கித் தண்ணென்
றினியமொழி துறவுநிலை யிலங்கிமிளிர்
செல்லப்ப முனிவ ரேறே!
தனைநிகரில் குருபரனே! யிந்நூலை
நின்னடியிற் சமர்ப்பித் தேனே.

ஆக்கியோன்.

உ

காசிக் கடவுளர் வணக்கம்.

துண்டிராச கணபதி (கலிவிருத்தம்.)

1. எண்டி சாமுக மெங்கு ளார்களும்
மண்டி யன்புடன் வாழ்த்திப் போற்றவே
கண்டி ராசநற் காசி வீற்றருள்
துண்டி ராசனைத் தொழுது போற்றுவாம்.

தண்டபாணி.

2. அண்ட ராதியோ ரடைந்து தாழ்ந்திட
விண்ட மாபுகழ் விளங்கு காசியில்
தொண்ட ராகியே தொழுத பேர்க்கருள்
தண்ட பாணிதன் தாள்கள் நாடுவாம்.

விசுவநாதர்.

3. திலக வாணுதற் றேவி யோடமர்ந்
திலகு மாரரு ளீந்தடி யார்சடம்
கலக மாகிய கர்ப்ப வாழ்வகற்
றுலக நாதனெண் கழல்கள் உன்னுவாம்.

அறுசீராசிரிய விருத்தம்.

4. பேசிடாப் பீடார் கங்கை பெருகியே யளாவிச் செல்லத்
தேசுலாம் பதிகட் கெல்லாஞ் செம்மையிற் சிறந்த தாகி
மாசிலாத் தன்னூர் தன்னில் மரித்தவர் பிறப்பைப் போக்குங்
காசிவாழ் விசுவ நாதன் கழலிணை கருத்துள் வைப்பாம்.

கேதாரநாதர் (நேரிசை வெண்பா.)

5. கேதார நாதர் கிளர்மகிமை யோங்குதிருப்
பாதார விந்தமலர் பற்றினால்—ஆதாரம்
ஆகு மதுபுவியி லல்லாத வெல்லாமும்
போகும் பொருந்தலற்றுப் போற்று.

விசாலாட்சி (கலி விருத்தம்.)

6. அகன்ற கண்ணி யடிமலர் தன்னையே
புகன்று நாளும் புந்தி யிருத்திடின்
அகன்றி டாம லடருங் கொடுவினை
அகன்று நீங்கியிங் கப்புறத் தோடுமே.

அன்னபூரணி.

7. கன்னல் மாரன் கவினொழித் தாரது
மன்னு மோர்நல மாடே வதிந்திடுஞ்
சொன்ன பூஷணி சொல்லு வார்க்கருள்
அன்ன பூரணி அடிகள் சூடுவாம்.

கங்காதேவி.

8. அங்கண் ஞால மதனின் மிகுபுகழ்
பொங்கி நாளும் பொலிந்து சிறக்கவே
எங்க ளீசன் எழிற்சடை தன்னில்வாழ்
கங்கை மங்கை கழல்கள் வணங்குவாம்.

சு. அ. இராமசாமி ஸ்ரீ காசியில் இயற்றியது.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
9	26	இலக்ஷிமி	இலக்ஷ்மி
11	19	தமிழ்ப்	தமிழ்
,,	22	தமிழ்ப்	தமிழ்
13	19	அறிவது	அரிவது
15	10	நறுமதை	நருமதை
,,	19	இருடபதேவர்	இடபதேவர்
17	13	கோயில்	கோபால்
,,	19	கோயில்	கோபால்
,,	26	ரத்ஸம்	ரத்லாம்
19	5	தமிழ்ப்	தமிழ்
21	9	தமிழ்ப்	தமிழ்
22	12	க்ஷித்திரம்	க்ஷேத்திரம்
23	27	சர்வநாச்	சர்வநாச்சி
25	21	உருவாரமும்	உருவமும்
27	2	திருவேணி	திரிவேணி
27	5	திருவேணி	திரிவேணி
33	26	அலங்காரகாட்சிக்	அலங்காரக்காட்சி
35	8	கண்டம்	காண்டம்
36	28	குஹா	7. குஹா
39	21	திலயாண்டேஸ்வரர்	திலபாண்டேஸ்வரர்
39	22	சுரயாண்டேஸ்வரர்	சுரபாண்டேஸ்வரர்
40	2	மாமி	மாயி
40	5	யெழுந்தருளி	வெழுந்தருளி
45	6	கீழ்க்கரை	கீழ்கரை
46	20	வடபால்	வடவால்
47	30	கங்கைக்கும்	கங்கைக்குப்
53	14	கோயில்	கோபால்
,,	16	கோயில்	கோபால்
,,	27	கோயில்	கோபால்
56	8	செல்லூர்	செல்லுவோர்
59	23	கோயிற்புர	கோயிற்புற
60	16	பஸேஸ்வரர்	பலேஸ்வரர்
60	22	புரத்தில்	புறத்தில்
60	26	புரத்தில்	புறத்தில்

உ

சிவமயம்.

பொருளடக்கம்.

எண்.	பொருள்.	பக்கம்.
	முகவுரை	
1.	திருத்தணி	1
2.	திருக்காளத்தி	2
3.	திருவேங்கடம்	4
4.	திருச்சானூர் (அலமேலுமங்காபுரம்)	7
5.	துங்கபத்திரா	,,
6.	கிருஷ்ணா	,,
7.	பண்டரிபுரம்	8
8.	பூனா	10
9.	பம்பாய்	,,
10.	நாசிக்பஞ்சவடி	12
11.	திரியம்பகம்	13
12.	ஓங்காரம்	14
13.	உஜ்ஜயினி	16
14.	ஆக்ரா	17
15.	மதுரா	18
16.	பிருந்தாவனம்	19
17.	கோகுலம்	,,
18.	கோவர்த்தனம்	20
19.	டில்லி	21
20.	குருக்ஷேத்திரம்	22
21.	ஹரித் துவாரம்	23
22.	ரிஷிகேசம்	24
23.	நைமிசாரண்யம்	25
24.	அயோத்தி	,,
25.	பிரயாகை	26
26.	விந்தியாசலம்	27
27.	ஸ்ரீ காசி	28
,,	ஆலயங்கள், தீர்த்தங்கள்	31
,,	விசுவநாத சுவாமி தெரிசனம்	32
,,	நித்திய யாத்திரை	35

,, பஞ்ச தீர்த்த யாத்திரை 37
,, தக்ஷிண யாத்திரை 38
,, பஞ்சக் குரோச யாத்திரை 41
,, காசியில் பார்க்கக்கூடியவை 42
,, ஸ்ரீ காசி க்ஷேத்திரத்தின் தீர்த்தக் கட்டங்கள் 44
28. சோனபத்திரா 45
29. கயா ,,
30. பாட்னு 47
31. வைத்தியநாதம் 48
32. கல்கத்தா 49
33. தாரகேசுவரம் 51
34. பூரி (ஜகந்நாதம்) ,,
35. சாக்ஷிகோபால் 53
36. சிம்மாசலம் ,,
37. இராஜமகேந்திரம் 54
38. பெஜவாடா 55
39. ஸ்ரீ சைலம் 56
40. மகாநந்தி 57
41. திருக்கோகர்ணம் 58

முகவுரை.

"கடவுட் கங்கை நதிப்படிவான் செல்ல வொருவன் கருது முனம், இடர் கூர்பாவ மவனையொழிந் தியாண்டு செல்வோமெனக் கருதும்..." என்பதுபெரியோர்வாக்கு. ஒருவன் காசிக்குச்சென்று கங்கையில் மூழ்க நினைக்குமுன் அவனுடைய எல்லாப்பாவங்களும் அவனைவிட்டுநீங்கி எங்கே போவோமென்று நினைக்கும் என்பது பொருள்.

புண்ணிய பூமியாகிய இப்பரத கண்டத்தின்கண் எண்ணரிய திருத்தலங்கள் இருக்கின்றன. அவைகளுள் வடநாட்டில் விளங்கும் காசிப்பதி மனிதர்களால் எடுத்துச் சொல்லமுடியாத பெருஞ்சிறப்பு வாய்ந்தது. வாரணாசியென்று ஆரணாதிகளெல்லாம் புகழ்ந்து கூறும் இவ்வரும் பெருந்தலத்தை யடைந்து கங்காநதியில் மூழ்கி ஆங் கெழுந்தருளியுள்ள ஸ்ரீவிசாலாட்சியம்மைசமேத விசுவநாதப் பெரு மானைப் பணியும் பேறு வாய்ப்பதருமையினும் அருமை.

பூர்வபுண்ணியமுடையவர்களேஇமயமுதல்குமரிவரையாத்திரை செய்கிறார்கள். புகைவண்டி வசதியில்லாத அந்நாளிலே ஒருவர் காசியாத்திரை செய்வதென்றால் அது கைலாசப் பிராப்தியாகவே கருதப்பட்டுவந்தது. இந்நாளிலோஎல்லோரும் எளிதிற்செய்யலாம்.

காசித்தலத்தையும் பிறதலங்களையுந் தெரிசித்தற்குபலரும்புகை வண்டிகளிற்சென்று கம்பெனிக்காரர் காண்பிக்குந்தலங்களை மாத் திரந்தெரிசித்து அநேக விவரங்கள் தெரியாமலே திரும்பிவிடுவதால் அனைவரும் வடநாட்டிலுள்ள தலவிசேடங்களையும் பிற விசேடங் களையும் நன்குணரும் பொருட்டு, அன்பர்கள் விரும்பிய வண்ணம் "ஸ்ரீ காசியாத்திரை விளக்கம்" என்னும் இந்நூலை சிதம்பரம், மௌனதேசிகராதீனம், உயர்திரு சபாபதி சுவாமிகளவர்கள் தாம் யாத்திரைசெய்தமுறைப்படி எழுதியுள்ளார்கள். சென்னையிலிருந்து பம்பாய்மார்க்கமாக அரித்துவாரம் ரிஷிகேஸம் வரைசென்று அயோத்தி, பிரயாகை, ஸ்ரீகாசி, கல்கத்தா வழியாகச்சென்னைவந்து சேரும்விதத்தில் இந்நூல் எழுதப்பெற்றிருக்கிறது.

இந்நூலைச் சிவநேசன் அநுபந்தமாக அச்சிட்டுப்புத்தக வடிவ மாக்கிய திருத்தென்குடித்திட்டைச் சிவாலயத்திருப்பணியாளரும், பேரன்பரும், பேரறிஞரும், தனவணிக வள்ளலும், சிவநேசச்செல் வரும், சிவநேசன் பத்திராதிபரும் ஆகிய ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரவர்கள் இனிதுவாழத் திருவருளை வழுத்துகின்றேன்.

சு. அ. இராமசுவாமி,
திருவாசக பாடசாலை, பலவான்குடி.

மதிப்புரை.

“காசியெனு மொருதலமிக் கயிலையினுஞ் சிறப்புளது கங்கை தீர்த்தம்
வீசுதிரைக் கொழுந்தோட்டிப் பரகதிக்கு வழிகாட்டும் வியந்து மூழ்கின்
மாசினுட லகிலிறந்தான் மரமேனும் விலங்கேனு மனிதரேனும்
ஈசனரு ளுபதேசஞ் செவிப்புகலா லிறைவனென விருக்க லாமே.”

தேவாதி தேவாய்த் திகழுஞ் சிவபரம்பொருள் பூதலத்தின்கண்ணே திருக்கோயில் கொண்டுறையுந் திருத்தலங்கள் பலவற்றுள்ளும் சிறந்து விளங்குவது வாரணாசி யென்னும் ஸ்ரீ காசி க்ஷேத்திரமேயாம். இத்திருத்தலம் சப்தபுரிகளுள் ஒன்றாக, முத்தி க்ஷேத்திரங்கள் நான்கனுள் ஒன்றாக அப்பதியில் மரிப்பவர் பாவங்களை வைரவர் தமது தண்டத்தால் போக்க அவரை இறைவி தன் மடிமிசைக் கிடத்த, இறைவர் அவரது வலது செவியில் தாரகப் பிரம மந்திரோபதேசஞ் செய்து முத்திகொடுக்கும் பெருமை வாய்ந்தது. மூர்த்தி, தலம், தீர்த்தமென்னும் மூவகைச் சிறப்பும் வாய்ந்த இத்தலத்துக்கு எத்தலங்களும் இணையாகா வென்பதை மேலே காட்டிய செய்யுளாலும்,

“அன்னபூ ரணியு மகிலநா யகன்போ லன்னையு மப்பனு மில்லை
பின்னல்வார் திரையங் கங்கைபோல் தீர்த்தம் பிறக்குமுப் புவனத்து மில்லை
என்னயா முரைப்போங் காசிபோற் றலமற் றெவ்வகை யண்டத்து மில்லை
முன்னரு மனைய காசியை நினைப்போர் மூடரா யுழல்வது மில்லை.”

என்ற செய்யுளாலுந் தெளியலாம். இத்தகு மகிமை வாய்ந்த உத்தம க்ஷேத்திர யாத்திரை செய்பவர்கட்கு உறுதுணையாக ஸ்ரீ காசி யாத்திரை விளக்கமென்னும் நூலைத் தங்கள் அநுபவ ஆராய்ச்சியுடன் எழுதி வெளியிட்ட சிதம்பரம் மௌனதேசிகாதீனம் ஸ்ரீமத் சபாபதிசுவாமியவர்களின் பேருபகாரம் புண்ணிய சீலர்கள் போற்றும் தகையது. இந்நூலில் யாத்திரையின் வரன் முறைகளும், க்ஷேத்திரங்கள், தீர்த்தங்கள், மூர்த்திகள் ஆகியவைகளின் சிறப்புக்களும், மூர்த்தி தலந் தீர்த்தம் முறையாய்த் தொடங்குவதால் கிடைக்கும் பலன்களும், வழிகளும் விளக்கப்பெற்றுள்ளன. சுவாமிகளின் குருலிங்க சங்கம பத்திக்கு அறிகுறியாகத் தங்கள் ஆதீனத்தின் ஈ வது பட்டத்து ஆசிரியர் ஸ்ரீ செல்லப்பஞான தேசிகரவர்களின் திருவுருவ நிழலோவியப்படத்தை இந்நூன் முகத்தில் வைத்து இந்நூலையும் அவர்கட்கே உரிமையாக்கியுள்ளார்கள். இந்நூலை ஒவ்வொரு சிவநேசச் செல்வர்களும் சுவாமிகள்பால் உவந்து பெற்றுக்கொள்ளவேண்டுவது இன்றியமையாததாகும்.

“சிவநேசன்” இராமசாமி.

செய்தித்திரட்டு.

ஐயரவர்களின் உடல் நலம்:- சென்னை மகா மகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர் பிரமஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்கள் இப்போது உடல் நலம் பெற்றிருக்கிறார்கள்.

திருமயிலாடி:- ஸ்ரீ பிருக நாயகி சமேத ஸ்ரீ சுந்தரேசுவரஸ்வாமி கோயிலில் ஸ்ரீ பால சுப்பிரமணிய சுவாமிக்கு மார்கழி ௨௬ ௳ தொடங்கி இம்மதி ௨௧ ௳ சுக்கிரவாரம் வரை லட்சார்ச்சனை நடைபெறுகிறது. முடிவில் சங்காபிஷேகமாதிய திருமஞ்சன திருவாராதனைகளும் திருவுலாக் காட்சியும் நடைபெறும்.

சென்னை:- ஸ்ரீ கந்தகோட்டத்தில் தைமீ ௪௯ ௳ முதல் பிரமோற்சவம் ௧௨ நாட்களிலும் இரவில் சுவாமியின்பின்னர் திருநெல்வேலி ஸ்ரீ நெல்லையப்பர்கோவில்தமிழிசைவாணராகியசைவத்திருவாளர்சுந்தர ஓதுவாமூர்த்திகளால் தக்க இன்னிசைக்கருவிகளுடன் தேவாரத்திருமுறை பாராயணம் நடைபெறுகின்றது.

திருச்செங்கோடு:- ஸ்ரீ முருகக்கடவுள் திருச்சந்நிதானத்தில் மார்கழி ௧ ௳ தொடங்கி தைமீ ௧ ௳ வரை பஜனைவிழாச்சிறப்பாகநடைபெற்றது.

திருச்செம்பொன்பள்ளி:— இத்தலம் ஆளுடைய பிள்ளையார் ஆளுடைய வரசு இவ்விருசமய குரவர்களால் தேவாரத் திருப்பதிகம் பெற்றது. இத்திருத்தல சிவாலயம் பழமையாய்க்கிலமுற்றிருந்ததைப் புதுக்கித்திருப்பணி முற்றுவித்துத் தைத்திங்கள் ௨௮ ௳ வெள்ளிக்கிழமை சுவாதிநாளில் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் நடைபெறுமெனவும், அன்றிரவு ஐம்பெருங்கடவுளர் திருவுலாக்காட்சி மிகச்சிறப்புடன் நடைபெறுமெனவும் அக்கோயில் தருமகர்த்தர்கள் தெரிவிக்கிறார்கள்.

பர்மா கலவரம்:— பர்மாவில் நடைபெற்றுவரும் கலவரத்தில் இந்தியர்களின் க்ஷேம நிலையைப்பற்றி விவாதிக்க திருவாளர்கள் குமாரராஜா எம். ஏ. முத்தைய செட்டியார், வ. சொ. ராம. வள்ளியப்ப செட்டியார், அப்துல் ஹமீத்கான் இவர்கள் கொண்ட ஓர் தூதுகோஷ்டி இன்று சென்னை பிரதம மந்திரியைப் பேட்டி கண்டது. பிரதம மந்திரியார், கலவரம் பற்றி மத்திய அரசாங்கத்திற்கும் பர்மா அரசாங்கத்திற்கும் தந்திகள் கொடுத்திருப்பதாகவும் தூது கோஷ்டியினரை மறுநாள் சந்திக்கும்படிக்கும் கூறியுள்ளார்.

சிவநேசன்.

குத்தம்மை முறை.

(மகாத்மாஜீ எழுதிய 'ஆரோக்கியவழி'யிலிருந்து எடுக்கப்பட்டது)

அம்மைகுத்துவதானது ஒருஅநாகரிகமானசெய்கை. இதைப்போன்ற மதியீனமான கொள்கை காட்டுமிராண்டிகளிடமுமில்லை.

அம்மை குத்துவதானது மிகவும் ஆபாசமான காரியம்; நமது சரீரத்திற்குள் செலுத்தப்படுகிற சீழானது பசுவின் அம்மைச் சீழ் மாத்திரமல்ல; அம்மைப்பூட்டியிருந்தவனுடைய அம்மைச் சீயும் அதில் சம்பந்தப்பட்டிருக்கிறது. இந்த வஸ்துவைக் கண்ணால் பார்த்தாலே ஒருவன் வாந்தி செய்வான்.

நீதி, மதம் ஆகிய இரண்டின் ஆணைகளையும் மீறியே நாம் அம்மை குத்திக்கொள்கிறோம். வழக்கமாக மாமிசம் சாப்பிடுகிறவர்கள்கூட இறந்துபோன ஒரு பிராணியின் இரத்தத்தைக் குடிக்க நடுங்குவார்கள். ஆனால் உயிருடன் இருக்கிற நிரபராதியான ஒரு பிராணியின் விஷத்தன்மை பொருந்திய இரத்தத்தைக் குடிப்பதைத் தவிர குத்தம்மை வேறு என்ன என்று எனக்குத்தெரியவில்லை. இம்மாதிரிப் பாவம் ஒன்றைச் செய்வதைவிட ஈசுவர பயம் உள்ளவர்கள் ஆயிரம் தடவை அம்மை பூட்டிச் சாகலாம்.

ஒரு பட்டணத்தில் பெரும்பாலோரான ஜனங்கள் அம்மை குத்திக்கொள்ள மறுக்கிறார்கள்; ஆயினும் அவர்கள் வியாதிக்கு ஆளாகாதவர்களாக இருக்கிறார்கள் என்று கணக்குகளிலிருந்து தெரிகிறது. இந்த ஜீவகாருண்யமற்றஅப்பியாசத்தைத் தொலைத்துத் தலைமுழுகவிடாமல் வழிமறிப்பது டாக்டர்களுடைய சுயநல எண்ணமேயாகும். இதனால் தங்களுக்குக்கிடைக்கும் வரும்படி போய்விடுமென்ற பயத்தினால் பலவியாதிகள் உண்டாவதை அவர்கள் கவனிக்கிறதில்லை. ஆனால் இந்தக்கெடுதிகளைத் தெரிந்துகொண்டிருக்கிற டாக்டர்கள் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் அம்மை குத்துவதற்குத் தீவிர சத்துருக்களாக இருக்கிறார்கள். அம்மைகுத்துவது கூடாத காரியமென்று மனப்பூர்த்தியாகக் கருதுகிறவர்கள் அதனால் வரக்கூடிய தண்டனைகளுக்குத் தயாராக இருந்துகொண்டு தங்களுடைய அபிப்பிராயத்தைப் பாதுகாப்பதற்காக அவசியமிருந்தால் உலகத்தையெல்லாம் எதிர்க்கும்படியான மனோதிடம் உள்ளவர்களாக இருக்கவேண்டும்.

"சிவநேசன்" ஆண்டுத் தொகை விவரம்.

உள்நாட்டிற்கு ரூ 1—8—0 அதற்கு மூலதனம் 30—0—0

அயல்நாட்டிற்கு ரூ 2—0—0 அதற்கு மூலதனம் 40—0—0

தனிப்பிரதி விலை அணா 0—2—0

விளம்பர விகிதம்.

வியாபார விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 4—0—0

நீதிமன்ற விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 8—0—0

திட்டை 'சிவநேசன்' அச்சியந்திரசாலையில், பத்திராதிபர், பலவான்குடி ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரால் அச்சியற்றி வெளியிடப்பெற்றது.